अमरकोशः

அமர கோசம்

(தமிழ்க்குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்
என். ஸ்ரீநிவாஸன்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்

Thanjavur Sarasvati Mahal Series No. : 438

अमरसिंहविरचितः

अमरकोशः

அமரகோசம்

(தமிழ்க் குறிப்புரையுடன்)

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்
வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்,
என். ஸ்ரீநிவாஸன்
முதுநிலை ஸம்ஸ்கிருத பண்டிட்
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2002]   விலை: ரூ. 65-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	அமரகோசம் - முதற்தொகுதி
பதிப்பாசிரியர்	:	என். ஸ்ரீநிவாஸன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	:	438
மொழி	:	ஸம்ஸ்கிருதம், தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீடு	:	மே. 2002
தாள்	:	TNPL 17.8 kg.
நூல் அளவு	:	24 செ. மீ. X 14. செ. மீ.
பக்கங்கள்	:	200
படிகள்	:	500
எழுத்து	:	16 மற்றும் 12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	நிகண்டு
பகுப்பு	:	P15,C 4 x1,1 31 P 02.1
விலை	:	ரூ. 65-00

வெளியீட்டாளர் முகவுரை

இந்திய மொழிகளில் மிகத்தொன்மையானவை வடமொழியும், தமிழ்மொழியுமாகும். இவ்விரண்டு மொழிகளின் தொடர்பினாலேயே பிற இந்திய மொழிகள் தோன்றியுள்ளன என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்திய நாகரீகத்தின் வெளிப்பாடாகத் தோன்றும் வேதங்கள் வடமொழியிலேயே உள்ளன. இவ்வேதங்களைத் தொடர்ந்து இதிகாசங்களும், புராணங்களும், இலக்கியங்களும் தோன்றி இந்தியப் பண்பாட்டின் விளக்கங்களாகத் திகழ்கின்றன.

வடமொழியைப் பயிலுகின்ற மாணவர் தொடங்கி, மொழிப்புலமை பெற்றவர்வரை தங்களுக்குத் தேவையான சொற்களின் பொருளை அறிந்துகொள்ளத் துணையாக இருப்பது கோசங்கள் எனப்படும் சொற்களஞ்சியங்கள். இதிலும் பலராலும் பாராட்டி மேற்கோள்களாக எடுத்துக்கொள்வது **அமரகோசம்** என்னும் சொற்களஞ்சியமாகும். இக்கோசத்தை இயற்றியவர் **அமரசிம்மன்** என்னும் ஜைனமதப் புலவர்.

வடமொழியில் உள்ள இந்நூல், குறிப்புரையுடன் இந்திய மொழிகளில் பல வெளிவந்துள்ளன. சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் தமிழ் - வடமொழியில் குறிப்புரையுடன் வெளிவந்துள்ளது. தற்போது தமிழ்க் குறிப்புரையுடன் வெளிவருவது தமிழ் மொழி ஆராய்ச்சியாளர்களுக்கும், வடமொழியைப் பயின்றுவரும் மாணவர்களுக்கும், புலவர்களுக்கும் பயனளிக்கும்.

இந்த அமரகோசத்தைத் தமிழ்க் குறிப்புரையுடன் வெளியிட மத்திய அரசின் திட்டப்பணியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பணி வடமொழிப் புலவர் திரு.

என். சீனிவாசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் இந்நூலகத்தின் வடமொழித்துறையில் கடந்து இருபத்திரண்டு ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

இந்த அமரகோசம் ஆறு தொகுதிகளாக வெளிவர இருக்கின்றது. அதில் தற்போது முதல்தொகுதி வெளிவருகிறது. எஞ்சிய தொகுதிகள் விரைவில் தொடர்ந்து வெளிவரும்.

இந்த நூலைச் சிறப்பாக செய்தளித்த புலவர் திரு. என். சீனிவாசன் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன். இப்பதிப்பிற்கு நுண்ணாய்வு புரிந்து உதவிய வடமொழிப்புலவர் திரு. வி. ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் வெளிவரக் காரணமாக இருந்த நூலக நிருவாக அதிகாரி திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலக வெளியீட்டு மேளாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலக ஒளி அச்சுக்கூடப் பிரிவினர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த நூல் வெளிவரப் பொருளுதவி புரிந்துள்ள மைய அரசுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலக வெளியீடுகளை வாங்கிப் படித்துப் பயனடையும் வாசகர்களும், மாணவர்களும் இந்த நூலையும் வாங்கிப் படித்துப் பயனடைய விரும்புகிறேன்.

சி. கோசலராமன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
நூலக இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
4-6-2002

16-1

முகவுரை

இந்திய நாகரீகத்திற்கு அடிப்படையாகத் திகழ்வது வேதங்கள். இது இன்னகாலத்தில் தோன்றியவை என்று உறுதிபடக் கூறமுடியவில்லை. மொழியாராய்ச்சியாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களைக் கூறுகின்றனர். இத்தகைய வேதங்கள் நான்கு. ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வேதங்களுக்கு அங்கங்கள் ஆறு. அவை சிக்ஷா, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், கல்பம், ஜ்யோதிஷம் என்று வகைப்படுத்தியுள்ளனர். இதில் சிக்ஷா-வ்யாகரணம்-சந்தஸ் என்ற மூன்றும். வேதத்தின் சொல்லுருவத்திற்கு உதவுகின்றன. பின்கூறப்பட்ட நிருக்தம் - கல்பம் - ஜ்யோதிஷம் ஆகிய மூன்றும் வேதங்களின் பொருளுருவத்திற்கு உதவுகின்றன. இந்நிலையில் வேதச் சொற்களின் பொருளை அறிய நிருக்தம் என்ற நூல் பயன்படுகின்றது.

நிருக்தமும் - யாஸ்கரும்

யாஸ்கர், வேதங்களில் உள்ள சொற்களுக்குப் பொருள் உணர **நிருக்தம்** என்ற வகையில் ஒரு நூல் எழுதினார். அதனை "**யாஸ்க நிருக்தம்**" என்று அழைக்கின்றனர். இது புகழ் பெற்றதாகும். இதற்குப் பொருள் எழுத - சொற்களின் தொகுப்புத் தேவைப்பட்டது. இந்தச் சொற்களின் தொகுப்புக்கு **வைதிகநிகண்டு** என்றும், **வைதிககோசம்** என்றும் கூறுகின்றனர். இந்த நிகண்டுவில் காணப்படும் சொற்களுக்கே பாஷ்யம் எழுதியுள்ளார் யாஸ்கர். இவரியற்றிய நிருக்தத்திற்கு "ஆதாரமாக இருந்தது வைதிக நிகண்டு என்றும், இதனைத் தொகுத்தவர்கள் யாஸ்கருக்கு முன்னிருந்தவர்கள்" என்றும், இதில் காச்யபர் எழுதிய கோசம் தொன்மை வாய்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஆகவே, நிருக்தத்திற்கு அடிப்படையாக அமைந்த வைதிககோசம்போல **"கோசம்"** என்ற பெயரில் வேத மொழிக்கு சொற்களஞ்சியங்கள் பல தோன்றின.

பிறகு, வால்மீகி ராமாயணம் முதலிய இதிகாஸ புராணங்கள் தோன்றிய பிறகு, இலக்கியங்களில் காணப்படும் சொற்களை வகைப்படுத்தி, ஸம்ஸ்க்ருத சொற்களஞ்சியங்கள் பல தோன்றின. அவை ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள்- ஒரே பொருளைச் சுட்டுகின்ற பல சொற்கள்-என்ற முறையில் பலவாறு விரிந்தன. ஒரே அக்ஷரம் (எழுத்து) ஒரு சொல்லாக பல பொருள்களை கூறுவதாக ஏகாக்ஷர நிகண்டு, இரு அக்ஷரங்கள் பல பொருட்களை கூறுவதாக அமைந்த த்வயக்ஷர நிகண்டு முதலியவை. இவை பெரும்பாலும் மந்திர சாஸ்திர உரைகளுக்கே உதவின.

பொதுவாக ராமாயணம் முதலிய இலக்கியங்களில் வருகின்ற சொற்களை வகைப்படுத்திக் கூறிய சொற்களஞ்சியங்கள் மேதினீ நிகண்டு, விச்வகோச நிகண்டு, ஹலாயுத நிகண்டு முதலிய நிகண்டுகள் அமரகோசத்திற்கு முன்னோடிகளாப் பிறந்தன. இவற்றை ஆதாரமாகக் கொண்டும், இவற்றிலிருந்து சொற்களை எடுத்துக்கொண்டும் பழக்கத்தில் இல்லாத பல சொற்களை கையாண்டும் காவ்யங்களைப் படைத்தவர்கள் பாகுரி, பட்டி, பாரவி, மாகன் முதலிய கவிகள். காளிதாஸன் முதலானோர் பழக்கத்திலுள்ள சொற்களையே கையாண்டு, அவற்றைத் தக்க சந்தர்பங்களில் புகுத்தி, அவற்றிற்கு மெருகூட்டி இருக்கிறார்கள்.

அமரகோசத்தின் தனிச்சிறப்பு

இப்பொழுது பழக்கத்தில் வந்திருக்கின்ற அகராதி - என்ற சொல் வைப்புமுறை-அதாவது சொற்களில் முதல் எழுத்தை அ, ஆ, இ, ஈ என்ற வகையில் வரிசைப்படுத்திப்

16-1

பொருள் கூறுகின்ற முறை, ஸம்ஸ்கிருதத்தில் மட்டுமல்ல மற்ற எல்லா இந்திய மொழிகளிலும், முன்னாளில் ஏற்படவே இல்லை.

இப்படி வளர்ந்த சொற்களஞ்சியங்களில் காணப்படாத - ஒருமுறையை அமரசிம்மன் தனது அமரகோசத்தில் கையாண்டு இருக்கிறார் என்பதுதான் இக்கோசத்தின் தனிச்சிறப்பு.

ஸம்ஸ்கிருத மொழியில் பெயர் சொற்களுக்குக்கெல்லாம் அவை, ஆண் - பெண் - என்று பகுத்தறியக் கூடிய உயிரினங்களுக்கு மட்டுமல்லாது, மரம் - செடி - கொடி போன்ற தாவர வர்க்கங்களுக்கும், மற்ற இனங்களுக்குரிய சொற்களுக்கும்கூட ஆண்பால் - பெண்பால் - இரண்டுமற்றது - என்று லிங்கப் பாகுபாடுகள் உண்டு. அதிலும் ஆண்களைக் குறிக்கின்ற சொற்களில் சில பெண்பாலாகவும், பெண்களைக் குறிக்கின்ற சில சொற்கள் ஆண்பாலாகவும் அமைந்துவிட்டன. இப்படிச் சொற்களின் லிங்க வேறுபாட்டை இலக்கணத்திலிருந்தும் பழக்கத்திலிருந்தும்தான் தெரிந்து கொள்ளமுடியும்.

ஆகவே, சொல்லை உபயோகிக்கின்றவர்கள் அந்தச் சொல்லின் (ஆண்பால் - பெண்பால் - நபும்ஸகலிங்கம்) லிங்கம் தெரிந்தால்தான் சரியாக உபயோகிக்கமுடியும். அமரகோசத்திற்கு முன்வந்த சொற்களஞ்சியங்கள், சொற்களையும் அவற்றின் பொருளையும் மட்டும் கூறினவே தவிர அந்தச் சொற்களின் லிங்கத்தை சுட்டிக்காட்டுவதில் அவச்யமான அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. அமரகோசத்தைப் படைத்தவராகிய அமரசிம்மன் இந்த விஷயத்தில் மிகுந்த அக்கரை எடுத்துக்கொண்டு, தான் எழுதியுள்ள அமரகோசத்தில் வருகின்ற ஒவ்வொரு சொற்களுக்கும் (சுமார் 13,284 சொற்களுக்கும்) இவை புல்லிங்கச். சொற்கள்; இவை புல்லிங்கத்திலும், நபும்ஸகலிங்கத்திலும் வரும் சொற்கள்; இவை ஸ்திரீ லிங்கச்

சொற்கள்; இவை மூன்று லிங்கத்திலும் வருபவை; இவை அவ்யயச் சொற்கள் என்றெல்லாம் சுட்டிக்காட்டி அவற்றுக்கு மாற்றுச் சொற்களையும் -- சுட்டிக்காட்டி மஹோபகாரம் செய்துள்ளார்

அமரகோசமும் அதன் ஆசிரியரும்

"அமரகோசம்" என்னும் இந்த கோசத்தை இயற்றியவர் அமரஸிம்ஹன் என்னும் புலவர் பெருமான். இவர் ஜைன சமயத்தைச் சேர்ந்தவர். பொதுவாக ஜைன மதத்தினர் தமிழ் மொழியில் இலக்கணங்களையும், நிகண்டுகளையும், நீதி நூல்களையும் இயற்றி எப்படி தமிழ்மொழியை வளப்படுத்தினார்களோ அப்படியே வடமொழி வளத்திற்கும் பாடுபட்டுள்ளனர்

அமரசிம்ஹன் கி. பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது உறுதிப்படாத செய்தி. இவரது காலம் பற்றியோ, பிறந்த ஊர் பற்றியோ ஒன்றும் நிர்ணயிக்கப்படவில்லை.

இவர் ஜைன மதத்தைச் சாந்தவர் என்றாலும் வைதிக மதமான இந்து மதம் பற்றிய தகவல்களை அதிகமாக் கொடுத்திருக்கிறார்.

இந்நூலாசிரியர் அமரஸிம்ஹனின் பெயராலேயே இந்த கோசம் அழைக்கப்படுகிறது. 'அமரஸிம்ஹன் இயற்றிய கோசம்' என்ற காரணத்தாலும், இந்த நூலின் தொடக்கச் சொல் 'அமர' என்ற சொல்லைக் கொண்டு ஆரம்பிப்பதாலும் இந்தக் கோசத்தை "அமரகோசம்" என்று அழைக்கின்றனர். ஆயின் இந்நூலாசிரியர் இந்த நூலுக்கு "நாமலிங்காநுசாஸநம்" என்றே **(नाम्नां लिङ्गस्य अनुशासनम्)** பெயர் வைத்துள்ளார். இதற்கு விளக்கம் முன்னால் கொடுக்கப் பட்டுள்ளது.

அமரகோசமும் அதன் உரைநூல்களும்

வடமொழி இலக்கிய மேதைகள் இந்த நூலை ஆதாரமாகக்கொண்டு புகழ்வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் படைத்திருக்கின்றனர். இதற்கு சுமார் 82 ஆசிரியர்களின் உரைகள், குறிப்புரைகள் (டீகா) போன்று பல இந்திய மொழிகளில் காணப்படுகின்றன. இவர்களில் குறிப்பிடத்தக்க உரையாசிரியர்களும் அவரது நூல்களும் :

1. **अमरकोशोद्घाटनम्** (அமரகோசோத்காடநம்) பட்டக்ஷீர ஸ்வாமி எழுதியது.

2 **पदचन्द्रिका** (பதசந்த்ரிகா) 1353 விக்ரம சகாப்தத்தில் ராயமகுடர் என்பவர் எழுதியது. இந்த உரையை பலர் கற்றிருக்கிறார்கள். இவர் கூறியிருக்கும் இலக்கணப் பகுதி - விகுதி விரிப்பைப் பற்றி பலர் குறைகூறியிருக்கிறார்கள்

3. **बुधमनोहरा** (புதமநோஹரா) ஸ்வயம்ப்ரகாசர் என்பவரின் சீடரான வேதாந்தீ மஹாதேவர் எழுதியது.

4. **पीयूषम्** (பீயூஷம்) ராமகிருஷ்ண தீக்ஷிதர் எழுதியது.

5. **अमरचन्द्रिका** (அமரசந்த்ரிகா) பரமாநந்த மைதிலர் எழுதியது. இந்த 3, 4, 5 மூவருமே மகுடரின் உரையைப் பின்பற்றுபவர்கள்.

6. **अमरपदवृत्तिः** (அமரபத வ்ருத்தி:) லிங்கையஸூரி இயற்றியது. இதற்கு "**லிங்கபட்டீயம்**" என்ற பெயருமுண்டு.

7. **व्याख्या सुधा** (வ்யாக்யா ஸுதா) வையாகரண ஸித்தாந்த கௌமுதி என்ற நூலை இயற்றிய **பட்டோஜி தீக்ஷிதரின்** குமாரர் **பாநுஜீ தீக்ஷிதர்** எழுதியது. இவருடைய உரையில் லிங்கபட்டீயத்திலுள்ளதுபோல் ஒவ்வொரு

சொற்களுக்கும் பகுதி - விகுதி - விரிவுரை கூறப்பட்டுள்ளது. மேலும், பகுதி - விகுதியைக் கூறித்தான் ஆகவேண்டும் என்று பிடிவாதத்தோடு கூறப்பட்ட பல விளக்கங்கள், பல சொற்களுக்கு பழக்கத்தில் உள்ளவற்றிற்குப் பொருள் பொருந்தவில்லை.

அமரகோசத்தின் அமைப்புமுறை :

அமரகோசம் மூன்று காண்டங்களைக் கொண்டது. இதில் காணப்படும் சொற்களின் தன்மைக்கு ஏற்றவாறு இனம் பிரித்து, வர்க்கம் வர்க்கமாக இணைத்திருக்கிறார்.

முதல் காண்டத்தில் சுவர்க்கத்தில், சொர்க்கம் என்ற சொல்லின் மாற்றுச் சொற்கள், அங்கு வாழும் தேவர்கள், நதிகள், திசைகள், திசையதிபர்கள் என்று சுவர்க்கத்தைச் சார்ந்த அத்தனை பெயர்களையும் அதில் இணைத்துள்ளார். இப்படி முதல் காண்டத்தில் சுவர்க்கம் முதலிய உலகங்கள் எல்லாவற்றையும் பற்றிய சொற்களைத் தொகுத்துக் கூறுகிறார்.

இரண்டாவது காண்டத்தில் பூவுலகில் மட்டுமுள்ள மனித வகை, பிராணிவகை, மரங்கள் மற்றும் இயற்கைவகை, இனவேறுபாடுகள் முதலிய அனைத்துவகைச் சொற்களைத் தொகுத்துக்கூறுகிறார்.

மூன்றாவது காண்டத்தில் சொற்களை, பொதுவாக அடைமொழிச் சொற்கள், கூட்டுச்சொற்கள், பல பொருள் கூறுபவை, என்றெல்லாம் வகைப்படுத்துகிறார். சிலேடையாக வருணிக்கவிரும்புகின்ற கவிகள் வெவ்வேறு பொருள்களைக் கூறுகின்ற ஒரே சொற்களைத் தமது கவிதையில் உபயோகிப்பதுண்டு. இப்பகுதி மிகவும் உபயோகப்படும்.

அமரகோசத்தின் தமிழ்மொழியாக்கம் :

அமரகோசத்தைத் தமிழில் பாடல் வடிவில் "பல்பொருட் சூடாமணி" என்னும் பெயரில் ஈச்வர பாரதி என்பவர் இயற்றியுள்ளார். இது இன்னும் அச்சில் வெளிவராத நூல். இவர் கி. பி. 1700ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் அமரகோசத்தைப் போன்றே மூன்று காண்டங்களாகப் பிரித்துள்ளார் என்ற செய்தியையும் தமிழறிஞர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் தனது "நிகண்டு சொற்பொருட்கோவை" என்ற நூலில் (பக்கம் 95) குறிப்பிட்டுள்ளார். இதன் வாயிலாக அமரகோசம் தமிழ் விருத்தப்பாவினால் மொழியாக்கம் செய்யப்பெற்ற செய்தி அறிஞர்களுக்கு அரியதொரு செய்தியாகும்.

அமரகோசமும் தமிழில் குறிப்புரையும்

அமரகோசத்திற்கு லிங்கய்யஸூரி இயற்றிய லிங்க பட்டீயத்தைத் தழுவி, தமிழில் டீகா என்ற குறிப்புரை கிரந்த எழுத்தில் ஸம்ஸ்கிருதமும் தமிழும் கலந்த நடையில் கி. பி. 1870, மற்றும் 1915ஆம் ஆண்டுகளில், அச்சில் வெளிவந்துள்ளன. இந்தக் குறிப்புரையை இயற்றியவர் திருவேங்கடாச்சாரியார் என்பவர். இந்த அச்சுநூல் எடுப்பதற்கும், படிப்பதற்கும் பயனற்றதாகவும் மிகச் சிதிலமாகவும் காணப்படுகின்றது. இந்த நூலும் தற்போது எங்கும் கிடைப்பதுமில்லை. சுமார் 100 ஆண்டுகளாகியும் இந்தக் கோசத்திற்கு இன்றுவரை ஒருவர்கூட தமிழில் உரையோ அல்லது குறிப்புரையோ எழுதவில்லை என்பதை New Catalogus Catalogorum முதல் தொகுதி மூலமாக அறியமுடிகிறது.

தற்போது வெளிவரும் இந்நூல் லிங்க பட்டீயத்தையும், வ்யாக்யாஸுதாவையும் அனுஸரித்து, ஸம்ஸ்கிருத இலக்கண விளக்கங்களை ஒதுக்கி, அவற்றின் விழுப்பொருள்கள்மட்டும் கூறப்பட்டுள்ளன. சில

பெயர்ச்சொற்களுக்கு இலக்கண விளக்கப்படி கிடைக்கின்ற பொருள் கூறியிருந்தாலும் அவை, பொதுவாக அந்தப் பெயர் உள்ளவற்றைக் குறிப்பதாகவே இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆகவே, அவற்றை ரூடியாக - இயற்பெயர்களாகக் கொள்ளவேண்டுமே தவிர ஆகுபெயர்களாகக் கொள்வது பொருந்தாது. இந்த முறையில் அமரகோசத்திற்கு வேறு குறிப்புரை இதுவரை வெளிவரவில்லை.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் ஸம்ஸ்கிருதப் பிரிவில் நூற்றுக்கணக்கான நிகண்டுகளும், கோசங்களும் உள்ளன. ஆயினும் இந்த நூலகத்தில் ஸம்ஸ்கிருதத் துறையின் வாயிலாக இதுவரை நிகண்டு நூல்கள் அச்சில் வெளிவரவில்லை. ஆதலால், அரியதும், சிறப்பு வாய்ந்ததுமான அமரகோசம் தமிழ் குறிப்புரையுடன் தற்போது முதன்முதலாக இந்த நூலகத்தின் சார்பில் வெளிவருகிறது.

இந்த நூற்பதிப்பு அமைக்கப்பட்டுள்ளமுறை

முதலில் அமரகோசத்தின் மூலசுலோகங்கள் முழு நூலுக்கும் தொடர் எண் வரிசையில் கொடுக்கப்படுகிறது. அடுத்து இந்த சுலோகங்களில் காணப்படும் ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாகப் பிரித்து, அதன் பால் வேறுபாடுகளை நகவளைவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஸம்ஸ்கிருதம் படித்தவர்களின் வசதிக்காக செய்யப் பட்டுள்ளன.

அடுத்து, அந்தந்த சொற்களை அப்படியே அருகில் கொடுக்கப்பட்டுள்ள தொடர் எண் வரிசையில் தமிழ் எழுத்து வரிவடிவில் கொடுக்கப்பட்டு-அதில் பால் மற்றும் அந்தச் சொல்லின் அந்தங்களையும் கொடுத்து அதன் விழுமிய பொருளும் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் அச்சொல்லையும் அதன் விழுமிய பொருளையும் தமிழர்கள் அறியமுடியும். இத்துடன் ஸம்ஸ்கிருத

இலக்கணத்தில் காணப்படுகின்ற சில செய்திகளையும் அவற்றின் உதாரணங்களையும் குறிப்பிட்ட சில சொற்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் ஸம்ஸ்கிருத மொழி கற்றுவருகின்ற மாணவர்களுக்கும், தமிழில் சொல்லாராய்ச்சி செய்கின்ற அறிஞர்களுக்கும் இம்முறைவைப்பு மிகவும் உதவும் எனக் கருதுகிறேன்.

நன்றியுரை :

இப்பதிப்பு மத்திய அரசின் நல்கையுடன் "திட்டப் பணியாக" மேற்கொண்டு தற்போது முதல் தொகுதி வெளிவருகிறது. இந்த நூலை நுண்ணாய்வு செய்ததுடன் பல அரிய கருத்துக்களை நல்கி என்னை ஆற்றுப்படுத்தியவர், ஸம்ஸ்கிருதம் – தமிழ்மொழி அறிஞர் பிரம்மஸ்ரீ. V. ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்கள். அன்னாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டப்பணியை எனக்கு நல்கிய நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான உயர்திரு. சி. கோசலராமன், இ. ஆ. ப. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நான் இப்பணியைச் சிறப்பாகச் செய்துமுடிப்பேன்" என்று என்மீது நம்பிக்கையுடன் இப்பணியில் என்னை ஈடுபடுத்திய இந்நூலக நிருவாக அதிகாரி உயர்திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலக வெளியீட்டு மேலாளர் உயர்திரு. ஆ. பஞ்நாதன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தொகுதி சிறப்பான முறையில் ஒளி அச்சுக்கோப்பு – காப்பி பிரிண்டர் வழியில் அச்சிடப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்த திரு. R. சுப்ரமணியன் அவர்களுக்கும், திரு. க. பத்மநாபன்

A-iii

அவர்களுக்கும், மற்றும் இதற்குத் துணைநின்ற ஏனையோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரகோசம் -- முதல் காண்டத்தின் முதல் நான்கு வர்க்கங்கள் மட்டும் முதல் தொகுதியாகத் தற்போது வெளிவருகின்றது. முதல் காண்டத்தின் எஞ்சிய வர்க்கங்கள் அடுத்த தொகுதியில் வெளிவரும்.

இந்நூலை தமிழ்மொழி – ஸம்ஸ்கிருத மொழி ஆய்வாளர்களும், மொழி ஆர்வலர்களும், மாணவர்களும் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுகிறேன்.

தஞ்சாவூர், **என். ஸ்ரீநிவாசன்.**
10-5-2002.

இத்தொகுதியில் வரும் தலைப்புகளின்

அகரவரிசைப் பட்டியல்

குறியீடுகள் :

புல்லிங்கத்திற்கு (பு)

ஸ்த்ரீ லிங்கத்திற்கு (பெ)

நபும்ஸக லிங்கத்திற்கு (ந)

சொற்களின் அந்தங்கள் மேலேகாணும் லிங்கத்தை ஒட்டி அ, ஆ, இ, ஈ என்று கொடுக்கப்பட்டுள்ளன.

।। श्रीः ।।

।। अमरकोशः ।।

।। प्रथमकाण्डः ।।

१. स्वर्गवर्गः

यस्य ज्ञानदयासिन्धोरगाधस्यानघा गुणाः ।
सेव्यतामक्षयो धीराः स श्रियै चामृताय च ।। 1 ।।

समाहृत्यान्यतन्त्राणि संक्षिप्तैः प्रतिसंस्कृतैः ।
संपूर्णमुच्यते वर्गैर्नामलिङ्गानुशासनम् ।। 2 ।।

प्रायशो रूपभेदेन साहचर्याच्च कुत्रचित् ।
स्त्रीपुंनपुंसकं ज्ञेयं तद्विशेषविधेः क्वचित् ।। 3 ।।

भेदाख्यानाय न द्वन्द्वे नैकशेषो न संकरः ।
कृतोऽत्रभिन्नलिङ्गानामनुक्तानां क्रमादृते ।। 4 ।।

त्रिलिङ्ग्यां त्रिष्विति पदं मिथुने तु द्वयोरिति ।
निषिद्धलिङ्गं शेषार्थं त्वन्ताथादि न पूर्वभाक् ।। 5 ।।

தமிழுரை :

अगाधस्य ज्ञान दया सिन्धोः यस्य எவருடைய அறிவும் பரிவும் அளப்பிற்கரியதாக கடலாகப் பெருகியுள்ளதோ

அவருடைய अनघा गुणाः நற்பண்புகள் குற்றமற்றவை. धीराः உறுதிபடைத்த நெஞ்சம் உடையவர்களே! सः सेव्यताम् அவரைஅணுகுங்கள். अक्षयः அவர் என்றும் அழிவற்றவர். அதனால் श्रियै: செல்வமும் अमृताय च அழிவின்மையும் பெருகும்.

சொல் - அறிவையும் பரிவையும் சுட்டிக்காட்டுமானால் அதன் வலிமை அளவற்றது. அதன் குணங்களான தெளிவு, இன்பம் முதலியவை குற்றமற்றவை. இந்த சொற்களஞ்சியம் வற்றாமல் மேலும் மேலும் பெருகிக்கொண்டே இருக்கும். இந்தச் சொற்கடலை ஒருவன் அணுகிவிட்டால், அதை ஆளத் தெரிந்துகொண்டுவிட்டால் அது சொற்செல்வத்தையும், அழியாப் புகழையும் கொடுக்கும். இதன் ஆசிரியரான **அமரசிம்மன்** ஜைன மதத்தைச் சார்ந்தவர். அவர் இந்த சொற்களஞ்சியத்தையே தெய்வமாகக் குறிப்பிடுகின்றார்

இந்த நூலாசிரியரான அமரசிம்மன்ட மற்ற நிகண்டு களையும், ஆராய்ந்து பார்த்தார். ஒரே பொருளுடைய பல சொற்களைத்தான் அவை தொகுத்துக் கொடுத்தன. ஆனால் ஸம்ஸ்கிருத மொழியில் ஒரு பொருளுடைய பல சொற்கள், பால், வேற்றுமைகளினால் ஒவ்வொன்றும் மாறுபடும். ஒருசொல் என்ன பால், (என்ன லிங்கம்) என்பது தெரிந்தால்தான் அதைச் சரியாக உபயோகப்படுத்தமுடியும். स्तवः स्तोत्रं स्तुतिर्नुतिः இந்த நான்கு சொற்களும் "துதியைக்" குறிப்பிடுகின்றன. அனால் स्तवः (ஸ்தவ:) என்பது புல்லிங்கம்-ஆண்பால். அதற்குரிய விகுதியோடு स्तवः (ஸ்தவ:) என்று காட்டப்பட்டிருக்கிறது. स्तोत्रम् (ஸ்தோத்ரம்) என்பது நபும்ஸகலிங்கம். அதற்குரிய விகுதியோடு காட்டப்பட்டிருக்கிறது. स्तुतिः नुतिः (ஸ்துதி: நுதி:) இந்த இரண்டும் பெண்பால் என்று ஒன்றுக்கொன்று காட்டிக் கொள்கின்றன.

இவ்விதம் மற்ற . சொற்கோசங்களை ஆராய்ந்து அவற்றிலுள்ள சொற்களை லிங்கம்-அதாவது பால் தெரியும் படியாக வரிசைப்படுத்தி இந்தக் கோசம் தயாரிக்கப்பட்டது. ஆகவே, இந்த கோசத்திற்கு "நாமலிங்காநுஸாஸநம்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த லிங்க ஒற்றுமைகள் உள்ள பலசொற்களைக் கூட்டுச்சொல்லாக அடுத்தடுத்துச் சொல்லியும், வேற்றுமை உள்ள சொற்களைப் பிரித்தும் கூறப்பட்டுள்ளது. ஒரே அர்த்தமுடைய ஒரே லிங்கத்தில் உள்ள சொற்கள் ஸமாஸங்களாக-அதாவது கூட்டுச் சொற்களாகக் கொடுக்கப் பட்டுள்ளன. சில சொற்கள் மூன்று லிங்கங்களிலும் வரும். அங்கு த்ரிஷு என்று மூன்று லிங்கங்களிலும், இந்தச் சொல்லை உபயோகப்படுத்தலாம் என்பது குறிப்பு. **द्वयोः** என்றால் புல்லிங்கத்திலும், நபும்ஸகலிங்கத்திலும் மட்டும் இந்தச் சொல் உபயோகிக்கப்படும் - ப்ரயோகிக்கப்படும் - என்று பொருள். நபும்ஸி என்றோ ந ஸ்த்ரியாம் என்றோ ந க்லீபே என்றோ குறிப்பிட்டிருந்தால் அவை முறையே புல்லிங்கம் தவிர மற்ற லிங்கங்களில் - ஸ்திரீலிங்கம் தவிர மற்ற லிங்கங்களில் - நபும்ஸகலிங்கம் தவிர மற்ற லிங்கங்களில் வரும் என்று பொருள்.

பிறப்பு என்ற பொருளைக் கொண்ட சொற்களை முறையாகக் கூறுகிறார்.

जनुर्जनन जन्मानि जनिरुत्पत्तिरुद्भवः ।

இங்கே, ஜநு:/ ஜநநம்/ ஜந்ம என்ற மூன்று சொற்களும் நபும்ஸகலிங்கங்கள் அவற்றைக் கூட்டுச் சொல்லினால் கொடுத்துள்ளார். ஜநி: உத்பத்தி: இவை இரண்டும் ஸ்த்ரீ லிங்கங்கள். இவை இரண்டையும் தொடர்ந்து சொல்லி, ஸ்திரீ லிங்கம் இவை என்று காட்டியுள்ளார். உத்பவ: என்ற சொல் - புல்லிங்கம்தான் என்பது எளிதாகவே எவருக்கும் தெரியும்.

மேலே ஒரே லிங்கத்தில் உள்ள சொற்களைக் கூட்டுச் சொல்லாக ஸமாஸ பதங்களில் சொல்லப்பட்டுள்ளன என்று கூறினோம்.

विद्याधराप्सरोयक्षरक्षोगन्धर्वकिन्नराः என்ற 11 வது ச்லோகத்தில் தொகுக்கப்பட்ட சொற்கள் அப்படியல்ல. அப்ஸரோ (ந), யக்ஷ (பு), ரக்ஷோ (ந), கந்தர்வ (பு), கிந்நரா: (பு) இவ்வாறு பல லிங்கங்களில் உள்ளனவே, ஒரு ஸமாஸ பதத்தில் என்ற கேள்வி எழலாம். இங்கு ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். இவையெல்லாம் ஒரே பொருள் உள்ளவையல்ல. வித்யாதரர் வேறு, அப்ஸரஸ் வேறு, யக்ஷர் வேறு. இப்படிப் பல பிரிவினரை ஒன்றுசேர்த்து இவர்கள் அனைவரும், **தேவயோநய:** தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று கூறுகிறார்.

ஒரே பொருள் உள்ள ஒரே லிங்கத்தைச் சேர்ந்த சொற்கள் ஸமாஸபதத்தில் வரும் என்ற முறை இங்கு மீறப்படவில்லை. இவற்றின் லிங்க வகுப்பு **ஸ்த்ரியாம் பஹுஷ்வப்ஸரஸ:** (சு. 53) என்று அப்ஸரஸ் என்ற சொல் பன்மையில் ஸ்த்ரீ லிங்கம் என்றும், **'நைர்ருதோ யாதுராக்ஷஸி'** என்று ரக்ஷஸ் என்கால் நபும்ஸக லிங்க விகுதியில் உணர்த்தி இருப்பதால் நபும்ஸகலிங்கம் என்று அறியலாகும்.

மேலும், மூலத்தில் 'து' என்றும், 'அத' என்றும், 'ஆதி' என்றும் வருகிற சொற்கள் அடுத்துவரும் சொற்களுடன் பொருந்தும்.

ஸம்ஸ்க்ருத மொழியியலில் எல்லாச் சொற்களுக்கும் வேர் - மூலம் உண்டு. எந்தச் சொல்லையும் பகுதி - விகுதி களாகப் பிரித்து இப்படி இந்தச் சொல் உருவாகி இருக்கிறது என்று எடுத்துக்காட்டப்படும். ஆகவே எல்லாச் சொற்களுமே ஆகு பெயர்கள்தான் என்று கொள்ளலாம். ஆனால் சில சொற்களை இப்படிப் பிரித்துப் பார்க்கும்போது அது ஒரு பொதுவான பொருளைத்தான் குறிக்கும். ஆனால் வழக்கில் ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பதாகவே முடியும். **அம்புஜம்** என்ற சொல்லைப் பிரித்துப் பார்த்தால் தண்ணீரில் உண்டானது அம்புதி ஜாதம் என்ற பொருள் கிடைக்கும்.

அப்படிப் பார்த்தால் தண்ணீரில் உண்டாகக்கூடிய பாசி, நுரை, (கொப்புளம்) நீர்க்குமிழி, முதலிய பொருட்கள் அனைத்தையுமே அது குறிப்பிடவேண்டும். ஆனால் உலக வழக்கில் அது தாமரையை மட்டும் குறிப்பிடுவதாகவே (மரபு) வந்து விட்டது. ஆகவே, அதை 'ரூடி'ச் சொல் என்பார்கள்.

அமரகோசத்திற்கு ஸம்ஸ்கிருதத்திலேயே பல உரைகள் உள்ளன. அவற்றில் "லிங்கபட்டர்" என்பவர் எழுதிய உரைக்கு **லிங்கபட்டீயம்** என்று பெயர். அதில் அவர் எல்லாச் சொற்களுக்கும் பகுதி-விகுதிப் பிரித்துப் பொருள் கூறியிருக்கிறார். அது ஸம்ஸ்கிருத இலக்கணம் படித்தவர்களுக்குத்தான் புரியும். அதை முழுவதுமாக இந்தத் தமிழ் உரையில் தருவது பயன்தராது. ஆயினும், சில சொற்களுக்கு அவர் செய்திருக்கிற விளக்கங்கள் எளிதாக, ரஸிக்கத்தக்கதாக இருப்பவை இந்த தமிழ் உரையில் கொடுக்கப்படுகின்றன.

பிதாமஹ என்ற சொல் இரண்டு இடங்களில் வருகின்றது. ஸ்வர்க வர்க்கத்தில் 16வது ச்லோகம், **ப்ரஹ்மமாத்மபூ: ஸுரச்ரேஷ்ட: பரமேஷ்டீ பிதாமஹ:**, மனுஷ்ய வர்க்கத்தில் 33வது ச்லோகம் **பிதாமஹ: பித்ருபிதா** இங்கே இரண்டாவது சொல் அதன் பகுதி-விகுதி விரிப்பின்படி தந்தைவழிப் பாட்டனாரைக் குறிக்கின்றது. ஆனால் முதலில் வரும் சொல் பிரம்மதேவனின் பெயர்ச் சொல்லாக வருகிறது. அவரும் பாட்டனார்தான். எப்படி? பிர்ம்மதேவனின் மனத்தின் ஸங்கல்பத்தில் பிறந்தவர்கள் மரீசி, சுயம்பு முதலியவர்கள். இவர்கள் மாநஸ புத்திரர்கள். அவர்கள் மணம்புரிந்துகொண்டு ஆண்-பெண் உறவினால் பெற்ற பிள்ளைகளே இந்த ப்ரபஞ்சம் முழுதிலுமுள்ள சகல ஜீவராசிகளும், ஆகவே, இந்த ஜீவராசிகளின் தந்தைகளுக்கு அவர் தந்தை. ஆதலால் உலகின் பாட்டனார், பிதாமஹர். ஆகவே அந்தச் சொல் அவருக்கு மட்டுமே பெயராக அமைந்து, பிர்ம்மதேவனின் பெயர் வரிசையில் அந்தச் சொல் இடம்பெற்றுள்ளது.

மேற்கூறிய இலக்கணங்களை கோசத்தின் ஆரம்பத்தில் நிரூபிக்கிறார் ஆசிரியர். சுவர்கம் என்ற பொருளில்

வருகின்ற சொற்கள் ஸ்வ: என்பது அவ்யயம். இதற்கு லிங்க வேற்றுமை கிடையாது. ஸ்வர்க: நாக: த்ரிதிவ: த்ரிதசாலயா: என்ற ஸமாஸபதம் புல்லிங்கத்தில் முடிவதால் இவையெல்லாம் புல்லிங்கங்கள். ஸுரலோக: என்பதும் புல்லிங்கம். த்யௌ: என்ற 'ஓ'காரத்தில் முடியும் சொல்லும், திவ என்று 'வ'காரத்தில் முடியும் சொல்லும் ஸ்த்ரீ லிங்கங்கள். த்யௌ திவௌ ஸ்த்ரியாம் க்லீபே த்ரிவிஷ்டபம் த்ரிவிஷ்டப என்ற சொல் நபும்ஸகலிங்கம்.

இனி, இந்த தமிழுரையில் சொற்களுக்கு அடுத்தாற் போல் அந்தச் சொல் முடிகிறதோ அந்த எழுத்தும், அது என்ன லிங்கமோ அதைக் குறிப்பிட்டு, பு என்றும், பெ என்றும், ந என்றும் 'நக' வளைவுகளில் கொடுக்கப்படும். அவ்யயம் என்றால் மாறுபடாதது என்று பொருள். சொற்கள் உபயோகத்திற்கேற்ப முன்பின் விகுதிகள் சேர்ந்து மாறுபடும். அவ்யயச் சொற்கள் மாறுபடாமல் அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு பொருள் கொடுக்கும்.

सदृशं त्रिषु लिङ्गेषु सर्वासु च विभक्तिषु ।
वचनेषु च सर्वेषु यन्न व्याप्नोति तदव्ययम् ।।

ஸத்ருசம் என்றால் ஒரேமாதிரி என்று பொருள்.

சுவர்கத்திற்குரிய சொற்கள் : 9

स्वरव्ययं स्वर्गनाकत्रिदिवत्रिदशालयाः ।
सुरलोको द्योदिवौ द्वे स्त्रियां क्लीबे त्रिविष्टपम् ।। 6

சுவடி: 1. स्वः (अ), 2. स्वर्गः (पुं), 3. नाकः (पुं), 4. त्रिदिवः (पुं), 5. त्रिदशालयः (पुं), 6. सुरलोकः (पुं), 7. द्यौः (स्त्री), 8. दिवौ (स्त्री), 9. त्रिविष्टपम् (न) இவைகள் ஸ்வர்கத்தின்பேர்.

1. ஸ்வ: (அவ்யயம்) கொண்டாடப்படுவது என்று சொல்லின் மூலத்திலிருந்து பெறும் பொருள். நாம் வாழும் பூமியிலிருப்பவர்கள் அதைக் காட்டிலும் சிறந்த சுகங்கள் அளிக்கும் உலகம் ஸ்வ: ஸ்வர்கம் என்று கொண்டாடு கிறார்கள்.

2. ஸ்வர்க: (புல்லிங்கம்-'அகாராந்தம்') நற்செய்கை களால் அடையப்படுவது.

3. நாக: (பு-அ) கம்-சுகம், அகம்-துக்கம், ந அகம்-எங்கு துக்கமில்லையோ அது. நாக: - ஸ்வர்கம்.

4. த்ரிதிவ: (பு-அ) சுவர்கத்தில் உள்ளவர்கள் இளமை, துள்ளும் பருவம், காளைப் பருவம் என்ற மூன்று நிலைகளில் விளங்குகிறார்கள்.

5. த்ரிதசாலய: (பு-அ) மேலே சொன்ன மூன்று நிலைகளில் (இங்கே மூப்பு கிடையாது) மட்டும் வாழ்கின்றவர் களின் இருப்பிடம்.

6. ஸுரலோக: (பு-அ) தேவர் உலகம்.

7. த்யௌ: (பெண்பால்-ஓகாராந்தம்) ஆகாயத்தில் உள்ளது. இது தேவர் விளையாடுமிடம். (த்யௌ:, த்யாவௌ த்யாவ: என்ற விகுதிகள் சேரும்)

8. திவௌ (பெ-வ) த்யோ: திவௌ திவ: என்றபடி விகுதிகள் சேரும். தேவர் விளையாடும்.

9. த்ரிவிஷ்டபம் (நபும்ஸக லிங்கம். – அகாராந்தம்) தேவர்கள் இனம் மூவகைப்படும். அதாவது,

அ. இந்திரன் முதலான திசை அதிபர் என்ற அதிகார பதவியில் உள்ளவர்கள்.

ஆ. அதிதியின் குமாரர்களாகப் பிறந்து தேவ லோகத்தில் வாழ்பவர்கள்.

இ. பூமியில் புண்ணியம் செய்து அதன் பயனாக சுவர்கம் செல்பவர்கள். இம்மூவகையினரும் பிரவேசிக்கும் இடம் - த்ரிவிஷ்டபம்.

ஆக சுவர்கத்தைக் குறிக்கும் சொற்கள் 9.

தேவர்களைக் குறிக்கும் சொற்கள் - 26

अमरा निर्जरा देवास्त्रिदशा विबुधाः सुराः ।
सुपर्वाणः सुमनसस्त्रिदिवेशा दिवौकसः ।। 7 ।।

आदितेया दिविषदो लेखा आदितिनन्दनाः ।
आदित्या ऋभवोऽस्वप्ना अमर्त्या अमृतान्धसः ।। 8 ।।

बर्हिर्मुखाः क्रतुभुजो गीर्वाणा दानवारयः ।
बृन्दारका दैवतानि पुंसि वा देवता स्त्रियाम् ।। 9 ।।

சுவடி - 1. अमरः (पुं), 2. निर्जरः (पुं), 3. देवः (पुं), 4. त्रिदशः (पुं), 5. विबुधः (पुं), 6. सुरः (पुं), 7. सुपर्वाः (पुं), 8. सुमनाः (पुं), 9. त्रिदिवेशः (पुं), 10. दिवौकाः (पुं), 11. आदितेयः (पुं), 12. दिविषदः (पुं), 13. लेखः (पुं) 14. अदितिनन्दनः (पुं), 15. आदित्यः (पुं), 16. ऋभुः (पुं), 17. अस्वप्नः (पुं), 18. अमर्त्यः (पुं), 19. अमृतान्धाः (पुं), 20. बर्हिर्मुखः (पुं), 21. क्रतुभुक् (पुं), 22. गीर्वाणः (पुं,) 23. दानवारिः (पुं), 24. बृन्दारकः (पुं), 25. दैवतं (न), 26. देवता (स्त्री).

தேவர்களைக் குறிக்கும் சொற்கள் இருபத்தாறு. அவற்றில் முதல் இருபத்துநான்கு சொற்கள் ஆண்பாலில் வரும். "தைவதாநி" என்ற சொல் நபும்ஸகலிங்கம்தான். சில இடங்களில் புல்லிங்கமாகவும் வரும். "தேவதா:" என்பது ஸ்த்ரீ லிங்கம்.

1. அமர: (பு-அ) மரணமற்றவர்கள்.

2. நிர்ஜர: (பு-அ) மூப்பிலிருந்து விடுபட்டவர்.

3. தேவ: (பு-அ) விளங்குபவர்.

4. த்ரிதச: (பு-அ) இளமை, துள்ளும் பருவம், வாலிபம் என்ற மூன்று வயது நிலைகளில் எப்போதும் மூன்றாவது நிலையிலே இருப்பவர், என்றும் வாலிபர்.

5. விபுதா: (பு-அ) சிறந்த அறிவாளி (மனித குலத் திலும் சிறந்த அறிவாளிகளை "விபுத" என்று அழைக்கலாம்) ஆனால் ரூடிச் சொல்லாக தேவர்களையே இது குறிக்கும்.

6. ஸுர: ((பு-அ) பிறவிச் செல்வர்.

7. ஸுபர்வா (பு-அ) நல்ல – யௌவனப் – பருவம் உடையவர். நல்ல விழாக்காலங்களில் கொண்டாடப்படுபவர்.

8. ஸுமனா: (பு-ஸ்) நல்ல மனமுடையவர். (நல்ல மனமுடையவர் எல்லோரையுமே இது குறிக்குமானாலும் தேவர்களுக்குப் பெயர்ச் சொல்லாகிவிட்டது).

9. த்ரிதிவேச: (பு-ஸ்) த்ரிதிவமான சுவர்கத்தின் அதிபர். (இந்திரன் முதலான திசை அதிபர்களைக் குறிக்கும்)

10. திவௌகா: (பு-ஸ்) சுவர்கத்தை வாழுமிடமாகக் கொண்டவர்.

11. ஆதிதேய: (பு-அ) கச்யப ப்ரஜாபதியின்மூத்த மனைவியான அதிதியிடம் பிறந்தவர்.

12. திவிஷத் (பு-அ) தேவருலகில் வாழ்பவர்.

13. லேக: (பு-அ) சித்திரங்களாக வரையப்படுபவர் என்று சொல்லுக்குப் பொருள். ஆனால் தேவர்களுக்கு ரூடிப் பெயர்.

14. அதிதி நந்தன: (பு-அ) அதிதியின் குமாரர்.

15. ஆதித்ய: (பு-அ) இந்தச் சொல் முக்கியமாக சூரியனைக் குறிக்கும். சில இடங்களில் தேவர்களைக் குறிக்கும்.

16. ருபு: (பு-உ) எல்லாப் பொருள்களையுமே ஒரே எழுத்தில் குறிப்பிடுகின்றவாறு மந்திர சாஸ்திரகோசம் உண்டு. அதற்கு அக்ஷரகோசம் என்று பெயர். அந்த கோசத்தின்படி "ர்ரு" என்ற எழுத்து ஸ்வர்கத்தைக் குறிக்கும். ஸ்வர்கத்தில் உள்ளவர்.

17. அஸ்வப்ன: (பு-அ) கனவு காணாதவர் (தூங்காதவர் என்றும் பொருள் உண்டு. கனவு காணாதவர் பூவுலகில் இல்லை. ஆதலால் இந்தச் சொல் தேவர்களை மட்டுமே கூறும்).

18. அமர்த்ய: (பு-அ) மரணமுடையவர் - மர்த்தியர் - மனிதர்; மரணமற்றவர் தேவர்.

19. அம்ருதாந்தா: (பு-ஸ்) அமுதத்தை உணவாகக் கொண்டவர்கள்.

20. பர்ஹிர்முக: (பு-அ) பூவுலகில், மனிதர்கள் தேவர்களைக் குறித்து அக்னியில் ஆகுதி செய்கிறார்கள். அதை தேவர்கள் ஏற்கின்றனர். ஆகவே, அக்னியின் வாயிலாக உணவை உடையவர் ஆவர்.

21. க்ரதுபுக் (பு-ஜ) யாகத்தில் உணவு உண்பவர்கள்.

22. கீர்வாண: (பு-அ) சொல்லிலே விளங்குபவர்கள். (பூர்வமீமாம்ஸா சாஸ்திரப்படி வேதத்தில் அந்த அந்த தேவதைகளைப் பற்றிக் குறிப்பிடும் சொற்தொகுதியே அந்தந்த தேவதையின் வடிவம் என்ற மரபுண்டு) ஆகவே, தேவர் சொல்லிலே விளங்குபவர்.

23. தானவாரி: (பு-இ) கச்யப ப்ரஜாபதியின் மற்றொரு மனைவியான தநு என்பவளின் பிள்ளைகளே தானவர்கள். அவர்களுக்கு எதிரி.

24. ப்ருந்தாரக: (பு-இ) சிறந்தவர்களின் கூட்டத்தில் உள்ளவர்.

25. தைவதம் (ந-அ) வழிபடத்தக்கவர்.

26. தேவதா (பெ-ஆ) வழிபடத்தக்க தேவர். ஆண்பால், பெண்பால் இருவரையும் குறிக்கும்.

கணதேவதைகளைக் குறிக்கும் சொற்கள் -- 9.

आदित्यविश्ववसवस्तुषिताभास्वरानिलाः ।
महाराजिकसाध्याश्च रुद्राश्च गणदेवताः ।। 10 ।।

1. आदित्याः (पुं), 2. विश्वे(देवाः) (पुं), 3. वसवः (पुं), 4. तुषिताः (पुं), 5. अभास्वराः (पुं), 6. अनिलाः (पुं), 7. महाराजिकाः (पुं), 8. साध्याः (पुं), 9. रुद्राः (पुं) இவர்கள் கணதேவதைகள்.

கணதேவதைகள்: கூட்டமாக-எப்போதும் பிரியாமல்-செயல்படுபவரான தேவதைகள்.

1. ஆதித்யா: (பு-அ) பன்னிரண்டுமாதங்களுக்கு மாதம் ஒருவர் என்று அந்தந்த மாதத்தில் ஆளுகை உள்ளவர்.

	ஆதித்யர்கள்	மாறு பெயர்கள்	மாதங்கள்
1.	தாதா (பு-ரு)	--	சித்திரை
2.	அர்யமா (பு-ந்)	–	வைகாசி
3.	மித்ர: (பு-அ)	--	ஆனி
4.	வஸிஷ்ட: (பு-அ)	ஸவிதா (பு-ரு)	ஆடி
5.	இந்த்ர: (பு-அ)	சக்ர (பு-அ)	ஆவணி
6.	விவஸ்வான் (பு-த்)	–	புரட்டாசி
7.	பூஷா (பு-ந்)	–	ஐப்பசி
8.	க்ரது: (பு-உ)	விதாதா (பு-ரு)	கார்த்திகை
9.	அம்சு: (பு-உ)	வாருண: (பு-அ)	மார்கழி
10.	பக: (பு-அ)	–	தை
11.	த்வஷ்டா (பு-ரு)	–	மாசி
12.	விஷ்ணு: (பு-உ)	உருக்ரம: (பு-அ)	பங்குனி

(ஸ்ரீமத்பாகவதம் ஸ்கந்தம் - 3; அத்யாயம் - 5; ச்லோகம் - 39; மற்றும் ஸ்கந்-11; அத்-12; ச்லோகம் 32 முதல் 44 வரை) இவர்கள் அதிதியின் குமாரர்கள்.

2. விச்வே (தேவா:) (பு-அ) வைதிக கர்மாக்களில் பிரவேசம் உடையவர்கள். பத்து நபர்களுடைய கூட்டம். தக்ஷன் ப்ரசேதாவின் குமாரர் ப்ரஜாபதி. அவருக்கு 60 பெண்கள். அவர்களில் பத்து பெண்களை தர்மர் என்பவருக்குக் கொடுத்தார். அவர்களில் விச்வா என்பவருக்குப் பிறந்தவர்களே விச்வேதேவர்கள். (ஸ்ரீமத்பாகவதம் - 6 -6 - 7)

3. வஸவ: (பு-உ) வஸுக்கள் எட்டுபேர். விச்வாவின் சகோதரிகளில் ஒருத்தி வஸு: (பெ-உ) அவளுடைய பிள்ளைகள் எட்டுபேர். அவர்கள்: (1) த்ரோணர், (2)ப்ராணர், (3) த்ருவர், (4) அர்க்கர், (5) அக்நி, (6) தோஷர், (7) வஸு, (8) விபாவஸு (ஸ்ரீமத்பாகவதம் 6 - 10 - 11)

4. துஷிதா: (பு-அ) இவர்கள் முப்பத்தாறுபேர்.

5. ஆபாஸ்வரா:(பு-அ) இவர்கள் அறுபத்து நான்குபேர்.

6. அநிலா: (பு-அ) இவர்கள் நாற்பத்தொன்பதுபேர். இவர்களுக்கு மருத்துக்கள் என்றும் பெயர் உண்டு. கச்யபரின் மனைவி திதி அம்மாள் (தன் தாயின் சகோதரி), தன்னைக் கொல்வதற்காக பிள்ளை வேண்டுமென்று தந்தையிடம் வரம் பெற்று கர்பமுற்றிருக்கிறாள் என்று தெரிந்துகொண்ட இந்திரன் அவள் சுத்தமில்லாமல் இருந்த நேரத்தில், அவளுடைய கர்பத்தில் நுழைந்து தனது வஜ்ராயுதத்தினால் 49 துண்டங்களாக வெட்டினான். ஆயினும் அவர்கள் இறக்கவில்லை. அவர்களைத் தனது சகோதரர்களாக ஏற்று இந்திரன் 49 வாயுதேவதைகளாக்கினான். (ஸ்ரீமத்ராமாயணம் - பாலகாண்டம் - ஸர்கம் 46-47).

7. மஹாராஜிகா: (பு-அ) இருநூற்று இருபது பேர்கள்.

8. ஸாத்யா: (பு-அ) தர்மரின் மனைவி ஸாத்யைக்குப் பிறந்தவர்கள். இவர்கள் பன்னிரண்டு பேர். (ஸ்ரீமத்பாக 6-6-7).

9. ருத்ரா: (பு-அ) எட்டு வஸுக்களில் ஒருவரான விபாவஸு என்பவருடைய மனைவி உஷா என்பவள். வ்யுஷ்டன், ரோசிஸ், ஆதபன் என்று மூன்று பிள்ளைகள். அந்த ஆதபனுக்கு பஞ்சயாமன் என்றும் பெயர். பூதன் என்றும் பெயர். அந்த பூதனின் மனைவி கோடிக்கணக்கான ருத்திரர்களைப் பெற்றெடுத்தாள். அவர்களுள் முக்கியமான வர்கள் பதினொன்று ருத்திரர்கள். அவர்கள்;

(1) ரைவதர், (2) அஜர், (3) பவர், (4) பீமர், (5) வாமர், (6) உக்ரர், (7) வ்ருஷாகபி, (8) அஜைகபாத், (9) அஹிர்புத்ன்யர் (10) பஹுரூபேர், (11) மஹான் (ஸ்ரீமத்பாகவதம் 6-6-17-18). இந்த ஒன்பது கணங்களில் 4, 5-7வது கணங்கள் வேதங்களில் மட்டும் கூறப்படுகின்றவர்கள். மற்றவர் புராணங்களிலும் பெயர் பெற்றவர்கள்.

தேவர் -- மானுடர் அல்லாதவர்கள் : 10

विद्याधराप्सरोयक्षरक्षोगन्धर्वकिन्नराः ।
पिशाचो गुह्यकः सिद्धो भूतोऽमी देवयोनयः ।। 11 ।।

1. विद्याधरः (पुं), 2. अप्सराः (स्त्री), 3. यक्षः, (पुं), 4. रक्षः (न), 5. गन्धर्वः (पुं), 6. किन्नरः (पुं), 7. पिशाचः (पुं), 8. गुह्यकः (पुं), 9. सिद्धः (पुं), 10. भूतः (पुं). अमी देवयोनयः இவர்கள் தேவாம்சம் பொருந்தியவர்கள்.

தேவயோநய: தேவாம்சம் பொருந்தியவர்கள். தேவரும் அல்லர், மானுடரும் அல்லர். பத்து வகையினர். இவ்வகையினர் ஆவிகளாக அலைவர்.

1. வித்யாதர: (பு-அ) குளிகை கண்ணில் மை இவை பூண்டு கண்களுக்குப் புலப்படாதவற்றையும் வருங்காலத்தில் நடக்கப்போவதையும் காணும் வித்தையைப் பெற்றவர்.

2. அப்ஸரா: (பெ-அ) எப்பொழுதும் தண்ணீரில் விளையாடுகின்ற மாதர். (மீன் வகைகளும் அவ்வகையா யினும்) தேவமாதரையே குறிக்கும்.

3. யக்ஷ: (பு-அ) மன்மதனுடையது போன்ற கண்ணுடையவர். குபேரனின் காவற்படையினர்.

4. ரக்ஷ: (ந-ஸ) பிர்மதேவனின் ஆதிபடைப்புக்களில் முக்குணக்கலவையில் தராதரக்குறை – கூடுதல்கள் நிதானப் படாமல் – படைக்கப்பட்டவற்றில் ரஜோகுணமும், தமோ குணமும் அதிகமாகிக் கொடுமை நிறைந்தவரான ஓர் மனிதவகை தேவாம்சம் பொருந்தியவராக இத்தொகுதியில் கூறப்படும் அனைத்து வகையினரும் இப்படியே.

5. கந்தர்வ: (பு-அ) நறுமணப் பூச்சில் ஆசைகொண்ட இசை விற்பன்னர்.

6. கின்னர: (பு-அ) குதிரையினுடையது போன்ற முகம் அமைந்த-யாழிசை விற்பன்னர்.

7. பிசாச: (பு-அ) பிணம் தின்னும் ஆவி. (விபத்தில் உயிர் இழந்து ஆனால் ஆயுள் முடியாத ஆவி).

8. குஹ்யக: (பு-அ) குபேரனின் செல்வங்களை (பறவை முட்டைகளை அடைகாப்பதுபோல) மறைத்துக் காப்பவர்.

9. ஸித்த: (பு-அ) மனித நிலையில் உத்தம ஸாதனைகள் புரிந்தும் ஆத்மஞானம் பெறாத நிலையில் உடலைவிட்டுப் பிரிந்து ஆவிகளாகச் சுற்றிவருபவர்.

10. பூத: (பு-அ) மேலே சொன்னவிதம் சாதனைபுரிந்து ஆண்டவன் அருள்பெற்று, அதைச் சில்லரை லாபங்களுக்காக பயன்படுத்தி உயிர்துறந்து ஆவிகளாகத் திரிபவர். (பூதம் – பிறவி எடுத்த பிராணி – என்ற பொருளில் நபும்ஸக லிங்கம்).

அஸுரர்களின் பெயர்கள் : 10

असुरा दैत्यदैतेयदनुजेन्द्रारि दानवाः ।
शुक्रशिष्या दितिसुताः पूर्वदेवाः सुरद्विषः ।। 12 ।।

1. असुरः (पुं), 2. दैत्यः (पुं), 3. दैतेयः (पुं), 4. दनुजः (पुं), 5. इन्द्रारिः (पुं), 6. दानवः (पुं), 7. शुक्रशिष्यः (पुं), 8. दितिसुतः (पुं), 9. पूर्वदेवः (पुं), 10. सुराद्विषः (पुं).

1. அஸுர: (பு-அ) கச்யபருடைய - தேவரல்லாத - புத்திரர்கள்.

2. தைத்ய: (பு-அ) திதி என்பவளின் புதல்வர்களான அஸுரர்கள்.

3. தைதேய: (பு-அ) " "

4. தநுஜ: (பு-அ) கச்யபருடைய மனைவி தநு என்பவளின் உடலில் தோன்றிய அஸுரர்.

5. இந்த்ராரி (பு-இ) இந்திரனின் (தேவர் தலைவன்) பகைவர்.

6. தாநவ: (பு-அ) மேலே சொன்ன தனுவின் குமாரர்.

7. சுக்ர சிஷ்ய: (பு-அ) பிருகு வம்சத்தில் பிறந்த சுக்ர ஆசாரியரின் சீடர்.

8. திதிஸுத: (பு-அ) திதியின் பிள்ளை.

9. பூர்வதேவா: (பு-அ) முன்னால் ஸத்வகுணம் நிறைந்தவர்களாகப் பிறந்து தேவரிடம் பகைபூண்டு அஸுர் ஆனவர்.

10. ஸுரத்விஷ: (பு-அ) தேவர்களை வெறுப்பவர்.

இவை அஸுரர்களின் பெயர்கள். அஸுரர்களைக் குறிப்பிட மேற்சொன்ன சொற்களைக் கவிஞர்கள் ஆளுவர்.

புத்தரைக் குறிப்பிடுகின்ற பெயர்கள் : 18

सर्वज्ञः सुगतो बुद्धो धर्मराजस्तथागतः ।
समन्तभद्रो भगवान् मारजिल्लोकजिज्जिनः ।। 13 ।।

षडभिज्ञो दशबलोऽद्वयवादी विनायकः ।
मुनीन्द्रः श्रीघनः शास्ता मुनिः . . . . ।।

1. सर्वज्ञः (पुं), 2. सुगतः (पुं), 3. बुद्धः (पुं), 4. धर्मराजः (पुं), 5. तथागतः (पुं), 6. समन्तभद्रः (पुं), 7. भगवान् (पुं), 8. मारजित् (पुं), 9. लोकजित् (पुं), 10. जिनः (पुं), 11. षडभिज्ञः (पुं), 12. दशबलः (पुं), 13. अद्वयवादी (पुं), 14. विनायकः (पुं), 15. मुनीन्द्रः (पुं), 16. श्रीघनः (पुं), 17. शास्ता (पुं), 18. मुनिः (पुं).

1. ஸர்வக்ஞ: (பு-அ) எல்லாம் அறிந்தவர். (புத்தமத நூல்களில் ஸர்வக்ஞ என்று புத்தரின் பெயராகவே வந்திருக்கிறது என்பது குறிப்பு. (ஆனால் ஸம்ஸ்க்ருத மொழியில் எல்லாமறிந்தவர் அனைவரையும் ஸர்வக்ஞர் என்று கூறப்படுகிறது) அறிஞன் என்பது பொதுப் பொருள்.

2. ஸுகத: (பு-அ) அவர் பிறந்தபோதே - என்று சொல்லுக்குப் பொருள். ஆனால் இது இவருடைய ரூடிப் பெயர். இதனால் இவருடைய மதத்திற்கு **ஸௌகதம்** என்று பொதுப் பொருள்.

3. புத்த: (பு-அ) ஞானம் முற்றி உலக ஆசிரியராக மலர்ந்தபோது அவருக்கு அறிஞர் வைத்த பெயர்.

4. தர்மராஜ: (பு-அ) அவர் வகுத்த மத வழியில் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றியவர்களுக்கு அறநெறிகளை வகுத்தவர். இது புத்தருக்கு "ரூடி"ப் பெயர் ஆகும்.

5. ததா கத: (பு-அ) அப்படி ஆனவர். அவர் எந்தப் பரநிலையைத் தன் தவத்தால் கண்டுபிடித்தாரோ அப்படி ஆனவர். (இதுவும் அவருக்குப் பெயர்).

6. ஸமந்த பத்ர: (பு-அ) இவர் இருக்கும் இடத்தைச் சுற்றிலும் மேன்மையும், செம்மையும் நிலவும். ஆகவே ஸமந்த பத்திரர்.

7. பகவான் (பு-த்) வைதிக மதத்தினர் ஆண்டவனை பகவான் என்று அழைப்பதுபோல புத்தமதத்தினர் புத்தரை பகவான் என்று அழைப்பர்.

8. மாரஜித் (பு-த) மன்மதனை வென்றவர். அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் இதற்குச் சான்று உண்டு. ஸ்கந்தமார: பற்றொழித்தவர், க்லேசதமார:- துன்பம்/கவலையை ஒழித்தவர், ம்ருத்யுமார: - சாவை ஒழித்தவர், தேவபுத்ரமார: - காமத்தை ஒழித்தவர் என்று புத்த மதத்தில் நான்குவித மாரர்கள் உண்டு. இவைகளை வென்றவர்.

9. லோகஜித் (பு-த்) உலக இயலை வென்றவர்.

10. ஜின: (பு-அ) வெற்றி இயல்புடையவர். ஜயசீல: - அவர் எடுத்துக்கொண்ட திட்டங்களில் தோல்வியடையாதவர்.

11. ஷடபிக்ஞ: (பு-அ) 1. சாதாரணக் கட்புலனுக்கு அகப்படாத தைவீகப் பார்வை, 2. தைவீகச் செவி, 3. பிறர் உள்ளத்தில் உள்ளதை அறிவது, 4. முற்பிறவியின் பயன் - நினைவு, 5. ஆத்மாவைப் பற்றிய அறிவு, 6. ஆகாயத்தில் பறக்கின்ற ஆற்றல்-பிறர் உடலில் நுழைவது என்ற ஆறு ஆற்றல்கள் படைத்தவர் என்பது புத்த மரபு.

1. கொடை, 2. நல்லியல்பு, 3. பொறுமை, 4. போர்த்திறன், 5. மன ஒருமைப்பாடு, 6. பேரறிவு என்ற ஆறு ஆத்மகுணங்கள் படைத்தவர்.

12. தசபல: (பு-அ) 1. புலனடக்கம், 2. மன அடக்கம், 3. நல்லியல்பு, 4. போர்த்திறன், 5. மன ஒருமைப்பாடு, 6. பொலிவு, 7. உடல் வலிமை, 8. திட்டமிட்டுச் செய்தல், 9. ஒற்றன்போல் மறைந்திருந்து கவனித்தல், 10. பரம்பொருள் பற்றிய அறிவு - என்ற அறிவு வலிமைகளைப் பெற்றவர்.

13. அத்வயவாதீ (பு-ந்) அத்வைதம் பற்றிய வாதம் புரிபவர்.

14. விநாயக: (பு-அ) விசிஷ்ட: நாயக: சிறந்த தலைவர் என்ற பொருளில் புத்தமதத்தில் பெயர் பெற்றவர்.

15. முநீந்த்ர: (பு-அ) பௌத்த முனிகளின் தலைவர்.

16. ஸ்ரீகன: (பு-அ) யோகப் பொலிவு நிறைந்தவர்.

17. சாஸ்தா (பு-ரு) புத்த மதத்தில் சாஸ்தா என்று அழைக்கப்படுகிறவர்.

18. முனி: (பு-இ)ஆழ்ந்த சிந்தனையுடையவர்.

இந்த பதினெட்டு சொற்களும் பௌத்த மத ஸம்ஸ்க்ருத நூல்களில் புத்தரின் பெயராக உபயோகப்பட்டுள்ளன. ஆகவே, பகுதி -- விகுதி பிரித்துக்கூறப்பட்ட இச்சொற்களின் பொருள் ௭ல்லாம் பௌத்தமத நூல்களுக்கே பொருந்தும்.

புத்தர் பற்றிய தகவல் சொற்கள்: 7

. . . . शाक्यमुनिस्तु यः ।। 14 ।।

स शाक्यसिंहः सर्वार्थसिद्धः शौद्धोदनिश्च सः ।
गौतमश्चार्कबन्धुश्च मायादेवीसुतश्च सः ।। 15 ।।

1. शाक्यमुनिः (पुं), 2. शाक्यसिंहः (पुं), 3. सर्वार्थसिद्धः (पुं), 4. शौद्धोदनिः (पुं), 5. गौतमः (पुं), 6. अर्कबन्धुः (पुं), 7. मायादेवीसुतः (पुं).

1. சாக்யமுனி (பு-இ) சக தேசத்தில் பிறந்த முனிவர். சாக்யமுநிஸ்து ய: - சாக்கிய என்பவர் எவரோ அவரேதான் முன்னே கூறப்பட்ட புத்தர். பின், ஏன் பிரித்துச் சொல்ல வேண்டும்? அவருடைய பிறவி, முன்னோர் பற்றிய தகவல்களை மட்டும் தருகின்ற ஏழு சொற்கள்.

2. சாக்கிய சிம்ஹ: (பு-அ) சாக்கியர்களில் சிறந்தவர்.

3. ஸர்வார்த்த ஸித்த: (பு-அ) எல்லாப் பயன்களையும் பெற்றவர்.

4. சௌத்தோதநி: (பு-அ) சுத்தோதனனின் குமாரன்.

5. கௌதம: (பு-அ) கோதம முனிவரின் சீடர்.

6. அர்க்கபந்து: (பு-உ) ஸூரிய வம்சத்தில் பிறந்தவர்.

7. மாயாதேவீஸுத: (பு-அ) மாயாதேவியின் குமாரர்.

பிரம்மதேவனின் பெயர்கள் : 20

ब्रह्मात्मभूः सुरज्येष्ठः परमेष्ठी पितामहः ।
हिरण्यगर्भो लोकेशः स्वयंभूश्चतुराननः ।। 16 ।।

धाताब्जयोनिर्द्रुहिणो विरिञ्चिः कमलासनः ।
स्रष्टा प्रजापतिर्वेधा विधाता विश्वसृड् विधिः ।। 17 ।।

1. ब्रह्मा (पुं), 2. आत्मभूः (पुं), 3. सुरज्येष्ठः (पुं) 4. परमेष्ठी (पुं), 5. पितामहः (पुं), 6. हिरण्यगर्भः (पुं), 7. लोकेशः (पुं), 8. स्वयंभूः (पुं), 9. चतुराननः (पुं), 10. धाता (पुं), 11. अब्जयोनिः (पुं), 12. द्रुहिणः (पुं), 13. विरिञ्चिः (पुं), 14. कमलासनः (पुं), 15. स्रष्टा (पुं), 16. प्रजापतिः (पुं), 17. वेधाः (पुं), 18. विधाता (पुं) 19. विश्वसृक् (पुं), 20. विधिः (पुं).

இந்த இருபதுபேர்களும் பிர்மாவுடையது.

1. ப்ருமமா (பு-ந்) படைப்பைப் பெருக்கியவர்.

2. ஆத்மபூ: (பு-ஊ) பரமாத்மாவிடம் உண்டானவர்.

3. ஸுரஜ்யேஷ்ட: (பு-அ) தேவர்களுள் மூத்தவர்.

4. பரமேஷ்டி (பு-ந்) படைப்பின் சிகரத்திலுள்ளவர்.

5. பிதாமஹ: (பு-ந) மரீசி முதலானோர் இவருடைய மானஸ புத்திரர். ஸங்கல்பத்தில் உண்டானவர்கள். அந்த மரீசி முதலானவர்கள், பெண்களை மணந்து ஆண்-பெண் உறவு மூலம் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் பெற்றெடுத்தனர். ஆகவே, சகல ஜீவராசிகளின் தந்தை களுக்குத் தந்தை. பாட்டனார். (உலக வழக்கில் பாட்டனாரைக் குறிப்பிடவேண்டுமானால் இன்னாருடைய பாட்டனார் என்று சொல்லவேண்டும். இவ்வித அடைமொழியில்லாத பாட்டனார். பிதாமஹர் என்று பெயர்).

6. ஹிரண்யகர்ப: (பு-அ) உலகில் மிகவும் மதிப்புள்ள பொருள் ஹிரண்யம்-தங்கம். அதுபோல படைப்புக்கெல்லாம் மூலப்பொருள்கள் அனைத்தையும் தன் கருவிலே கொண்டவர். (உலகைப் படைக்க அவர் வெளியில் மூலப் பொருளைத் தேடவில்லை)

7. லோகேச: (பு-அ) உலகின் அதிபதி.

8. ஸ்வயம்பூ: (பு-ஊ) பரமாத்வினுடைய ஸங்கல்பத் தால் உண்டானவராகையாலே அவருக்கு உற்பத்திப் பொருள் கிடையாது. தானே பிறந்தவர்.

9. சதுரானன: (பு-அ) நான்கு முகங்கள் பெற்றவர்.

10. தாதா (பு-ரு) தான் பெற்ற ஜீவர்களுக்கு வாழுமிடம் படைத்தவர்.

11. அப்ஜயோனி: (பு-அ) நாராயணனுடைய உந்தியில் முளைத்த தாமரையே இவருக்குப் பிறப்பிடம்.

12. த்ருஹிண: (பு-அ) தமது படைப்பை எதிர்பவர் களுக்கு எதிரி.

13. விரிஞ்சி: (பு-இ) விரிவாக்கம் செய்பவர்.

14. கமலாஸன: (பு-அ) தாமரைமேல் அமர்ந்தவர்.

15. ஸ்ரஷ்டா (பு-ரு) படைப்பவர்.

16. ப்ரஜாபதி: (பு-இ) தாம் பெற்ற செல்வங்களின் அதிபர்.

17 வேதா: (பு-ஸ்) பிரபஞ்சத்தின் வளர்ச்சிக்கு விதிமுறை வகுத்தவர்.

18. விதாதா: (பு-ரு) மேற்படி

19. விஸ்வஸ்ருக் (பு-ஜ) உலகைப் படைத்தவர்.

20. விதி: (பு-இ) விதிமுறை வகுத்தவர்.

விஷ்ணுவின் பெயர்கள் : 39

विष्णुर्नारायणः कृष्णो वैकुण्ठो विष्टरश्रवाः ।
दामोदरो हृषीकेशः केशवो माधवः स्वभूः ।। 18

दैत्यारिः पुण्डरीकाक्षो गोविन्दो गरुडध्वजः ।
पीताम्बरोऽच्युतः शाङ्र्गी विष्वक्सेनो जनार्दनः ।। 19

उपेन्द्र इन्द्रावजश्चक्रपाणिश्चतुर्भुजः ।
पद्मनाभो मधुरिपुर्वासुदेवस्त्रिविक्रमः ।। 20

देवकीनन्दनः शौरिः श्रीपतिः पुरुषोत्तमः ।
वनमाली बलिध्वंसी कंसारातिरधोक्षजः ।। 21

विश्वंभरः कैटभजिद् विधुः श्रीवत्सलाञ्छनः ।। 22

1. विष्णुः (पुं), 2. नारायणः (पुं), 3. कृष्णः (पुं), 4. वैकुण्ठः (पुं), 5. विष्टरश्रवाः (पुं), 6. दामोदरः (पुं), 7. हृषीकेशः (पुं), 8. केशवः (पुं), 9. माधवः (पुं), 10. स्वभूः (पुं), 11. दैत्यारिः (पुं), 12. पुण्डरीकाक्षः (पुं),

13. गोविन्दः (पुं), 14. गरुडध्वजः (पुं), 15. पीताम्बरः (पुं), 16. अच्युतः (पुं), 17. शाङ्र्गी (पुं), 18. विष्वक्सेनः (पुं), 19. जनार्दनः (पुं), 20. उपेन्द्रः(पुं), 21. इन्द्रावरजः (पुं), 22. चक्रपाणिः (पुं), 23. चतुर्भुजः (पुं), 24. पद्मनाभः (पुं), 25. मधुरिपुः (पुं), 26. वासुदेवः (पुं), 27. त्रिविक्रमः (पुं), 28. देवकीनन्दनः (पुं), 29. शौरिः (पुं), 30. श्रीपतिः (पुं), 31. पुरुषोत्तमः (पुं), 32. वनमाली (पुं), 33. बलिध्वंसी (पुं), 34. कंसारातिः (पुं), 35. अधोक्षजः (पुं), 36. विश्वंभरः (पुं), 37. कैटभजिद् (पुं), 38. विधुः (पुं), 39. श्रीवत्सलाञ्छनः (पुं).

ஆயிரக்கணக்கான பெயர்களையுடைய ஸ்ரீமந்நாராயணனுக்கு 39 பெயர்கள் மட்டுமே இங்கு கூறப்பட்டுள்ளன.

1. விஷ்ணு: (பு-உ) எங்கும் படர்ந்து விரிந்தவர்.

2. நாராயண: (பு-அ) தண்ணீரில் வாழ்பவர்.

3. க்ருஷ்ண: (பு-அ) கருத்த திருமேனி உடையவர் - கண்ணன்.

4. வைகுண்ட: (பு-அ) தலைகுனிவு ஏற்படாதவர். காலக்கணக்கில் ஆறாவதான ரைவத மன்வந்தரத்தில் சுப்ரர் என்பவருக்கு விகுண்டா என்ற மனைவியிடம் அவதாரம் செய்தவர். அவர்தான் வைகுண்டம் என்ற பரமபதத்தை நிறுவினவர். (ஸ்ரீமத்பாகவதம் 8-5-3-5).

5. விஷ்டரஸ்ரவா: (பு-ஸ) அவர் ப்ரஸன்னமாக இருப்பதாக அரசமரம் புகழ்பெற்றது. அரசமரத்தில் உறைந்தவர்.

6. தாமோதர: (பு-அ) வயிற்றில் தயிர் கடையும் கயிற்றினால் கட்டுண்டவர்.

7. ஹ்ருஷீகேச: (பு-அ) புலன்களை ஆள்பவர்.

8. கேசவ: (பு-அ) சிறந்த தலைமுடியுடையவர்.

9. மாதவ: (பு-அ) லக்ஷ்மீ மணாளன்

10. ஸ்வபூ: (பு-ஊ) தானே தோன்றியவர்.

11. தைத்யாரி: (பு-இ) அஸுரர்களின் எதிரி.

12. புண்டரீகாக்ஷ: (பு-அ) தாமரைக்கண்ணன்.

13. கோவிந்த: (பு-அ) பசுக்களைக் காப்பவன். சொல் ஆட்சிமிக்கவன். பூமியை மீட்டவன். (வராகாவதாரம் எடுத்து).

14. கருடத்வஜ: (பு-அ) கருடக் கொடியோன்.

15. பீதாம்பர: (பு-அ) மஞ்சள் ஆடை - பொன்னாடை பூண்டவர்.

16. அச்யுத: (பு-அ) தன் நிலையிலிருந்து நழுவாதவன். த்ருட: ஸங்கர்ஷணோரச்யுத: என்று மூன்று நாமங்களின் தொடர்ச்சி விஷ்ணு சகஸ்ரநாம ஸ்தோத்ரத்தில் காணலாம். கிணற்றில் விழுந்தவனைக் கரையேற்ற முனைபவர், தான் திடமாக ஊன்றி நிற்கவேண்டும். பின், அவனை இழுக்கும் வலிமை பெற்றிருக்கவேண்டும். தன் நிலையிலிருந்து நழுவாதவனாகவும் இருக்கவேண்டும். தன் தரும நெறியில் இருந்து வழுவாது நின்று ஜீவர்களைக் கரையேற்றுபவர்.

17. சார்ங்கீ (பு-ந்) ஸ்ரீராமனுடைய வில். நீண்ட கலைமானுடைய கொம்பினால் தயாரிக்கப்பட்டது. எவ்வளவு வளைத்தாலும் நிமிரக்கூடிய திமிர்படைத்து கலைமான் கொம்பு. உடையாதது. அத்தகைய வில்லை உடையவர்.

18. விஷ்வக்ஸேந:(பு-அ) எத்திசையிலும் பரவுவதற்குத் திறன்பெற்ற படைபலம் உடையவர்.

19. ஜநார்தந: (பு-அ) பிறவியை அறவே ஒழித்து முக்தியை அளிப்பவர்.

20. உபேந்த்ர: (பு-அ) இந்திரனுக்கு அனுகூலமாக தேவஸபையில் வீற்றிருந்தவர்.

21. இந்த்ராவரஜ: (பு-அ) இந்திரனுக்குப் பிறகு அதிதியிடம் பிறந்தவர்.

22. சக்ரபாணி: (பு-இ) ஸுதர்சநம் என்ற சக்கரத்தைக் கையில் ஏந்தியவர்.

23. சதுர்புஜ: (பு-அ) நான்கு கரங்கள் உடையவர்.

24. பத்மநாப: (பு-அ) தன் உந்தியில் தன் ஸங்கல்பத்தால் தாமரைமலரை முளைக்கவைத்தவர்.

25. மதுரிபு: (பு-அ) மது என்ற அரக்கனின் எதிரி. (அவனை ஒழித்தவர்).

26. வாஸுதேவ: (பு-அ) கிருஷ்ணாவதாரத்தில் வஸுதேவருக்கு மகனாய்ப் பிறந்தவர். அகில உலகையும் தனது வஸ்த்ரம்போல் வளைத்துப் போட்டுக்கொண்டவர்.

27. த்ரிவிக்ரம: (பு-அ) அகில உலகையும் மூவடிகளாக அளந்தவர்.

28. தேவகீநந்தன: (பு-அ) தேவகியின் மகன்.

29. சௌரி: (பு-இ) சூரன் என்ற யாதவ வம்சத்து அரசனின் மகன் வஸுதேவருக்குப் பிறந்தவன்.

30. ஸ்ரீபதி: (பு-அ) லக்ஷ்மீ மணாளன்.

31. புருஷோத்தம: (பு-அ) பிழைக்கின்ற-சாகின்ற-உடல்களில் அழியாமல் தொடர்கின்ற ஆத்மா புருஷன். அழியக்கூடிய இயற்கையிலும் உடல்களில் ஊறுகின்ற ஆத்மாவிலும் சிறந்தவன். புருஷோத்தமன்.

(பகவத்கீதை அத்-6; ச்லோ-18)

32. வனமாலீ (பு-ந்) தோளிலிருந்து பாதம் வரை தொங்குகின்ற-பல வண்ண வண்ணப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையைப் பூண்டவன்.

33. பலித்வம்ஸீ (பு-ந்) மஹாபலி என்ற அஸுரனை அடக்கியவன்.

34. கம்ஸாரதி: (பு-அ) கம்ஸன் என்ற தன் மாமனுக்கு - கொடியவனுக்கு - எதிரி.

35. அதோக்ஷஜ: (பு-அ) புலன்களின் வேட்கையைக் கீழே தள்ளி நிமிர்ந்தவனுக்குப் புலப்படுகின்றவன்.

36. விச்வம்பர: (பு-அ) உலகைத் தாங்குபவன்.

37. கைடபஜித் (பு-த்) கைடபன் என்ற அஸுரனை வென்றவர்.

38. விது: (பு-உ) தீமையைக் களைபவன். (ஆனால் பெரும்பாலும் இந்தச் சொல் சந்திரனையே குறிக்கும்.)

39. ஸ்ரீவத்ஸலாஞ்சன: (பு-அ) திருமாலின் மார்பில் ஒரு மரு உண்டு. அதற்குப் பெயர் ஸ்ரீவத்ஸம். அந்த மருவை அடையாளமாக உடையவன். (பொதுவாக ஒரு மனிதனுக்குக் குறிப்பிட்ட அடையாளமாக மருவைக் காண்பது வழக்கம்.)

இந்த முப்பத்தொன்பது சொற்களும் மஹாவிஷ்ணுவைக் குறிக்கும். இந்த முப்பத்தொன்பது பெயர்களில் விஷ்ணுவின் அவதாரங்களில் தகப்பனாறாகும் பாக்கியம் பெற்ற ஒருவரைத்தான் குறிப்பிட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே அடுத்த சொல் வருகிறது.

கண்ணனின் தந்தையின் பெயர்கள் : 2

वसुदेवोऽस्य जनकः स एवानकदुन्दुभिः ।

1. वसुदेवः (पुं), 2. आनकदुन्दुभिः (पुं).

1. வஸுதேவ: (பு-அ) கண்ணனின் தந்தை. அவருடைய மற்றொரு பெயர் –

2. ஆனக துந்துபி: (பு-இ) இந்த வஸுதேவர் பிறந்தபோது பறையும், பேரிகையும் கொட்டப்பட்டது. கிருஷ்ணனின் தந்தையைக் குறிப்பிட்ட பெயர்கள் இரண்டு.

கண்ணனின் தமையனின் பெயர் : 17

बलभद्रः प्रलम्बघ्नो बलदेवोऽच्युताग्रजः ।। 23 ।।

रेवतीरमणो रामः कामपालो हलायुधः ।

नीलाम्बरो रौहिणेयस्तालङ्गो मुसली हली ।। 24 ।।

संकर्षणः सीरपाणिः कालिन्दीभेदनो बलः ।

1. बलभद्रः (पुं), 2. प्रलम्बघ्नः (पुं), 3. बलदेवः (पुं), 4. अच्युताग्रजः (पुं), 5. रेवतीरमणः (पुं), 6. रामः (पुं), 7. कामपालः (पुं), 8. हलायुधः (पुं), 9. नीलाम्बरः (पुं), 10. रौहिणेयः (पुं), 11. तालाङ्कः (पुं), 12. मुसलिन् (पुं), 13. हलिन् (पुं), 14. संकर्षणः (पुं), 15. सीरपाणिः (पुं), 16. कालिन्दीभेदनः (पुं), 17. बलः (पुं). இந்த பதினேழும் பலராமன் பேர்.

1. **பலபத்ர:** (பு-அ) வஸுதேவருக்கு ரோஹிணியிடம் பிறந்த பிள்ளைக்கு 'பலன்', என்றும் 'பலபத்ரன்' என்றும் பெயர் வைத்தார் கர்காசாரியார்.

2. **ப்ரலம்பக்ன:** (பு-அ) ப்ரலம்பன் என்ற அஸுரனை மாய்த்தவர்.

3. **பலதேவ:** (பு-அ) இப்படியும் பெயர்.

4. **அச்யுதாக்ரஜ:** (பு-அ) அச்யுதனான கண்ணனின் அண்ணன்.

5. **ரேவதீரமண:** (பு-அ) ரேவதியின் கணவன்.

6. **ராம:** (பு-அ) இப்படியும் இவருக்குப் பெயர்.

7. **காமபால:** (பு-அ) பிரத்யும்னன் என்ற பெயரில் கண்ணனுக்குப் பிறந்த மன்மதனைப் போரில் காப்பாற்றினார்.

8. **ஹலாயுத:** (பு-அ) கலப்பையை ஆயுதமாக ஏந்தியவர்.

9. **நீலாம்பர:** (பு-அ) நீல நிறமுள்ள ஆடையையே புனைபவர்.

10. **ரௌஹிணேய:** (பு-அ) வஸுதேவர் மனைவி ரோஹிணியிடம் பிறந்தவர்.

11. **தாலாங்க:** (பு-அ) பனைமரத்தைத் தனது கொடியில் வரைந்துகொண்டவர்.

12. முஸலீ (பு-ந்) உலக்கையை(யும்) ஆயுதமாகக் கொண்டவர்.

13. ஹலீ (பு-ந்) எப்போதும் கலப்பையோடு இருப்பவர்.

14. ஸங்கர்ஷண: (பு-ந) இவர் தேவகியின் வயிற்றிலே கருவுற்றுப்பின் மாயையினால் ரோஹிணியின் வயிற்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டவர்)

இவர் ரோமஹர்ஷணர் என்ற புராணம் சொல்பவரை அவருடைய இருக்கையிலிருந்து இழுத்து கர்வத்தை அடக்கினவர். (ருத்ரனின் பல வடிவங்களில் ஸங்கர்ஷணர் என்ற வடிவமும் உண்டு. ஆனால் அது பலராமனின் வடிவமோ -- பெயரோ அல்ல.

15. ஸீரபாணீ: (பு-அ) கலப்பையைக் கையில் ஏந்தியவர்.

16. காளிந்தீபேதன: (பு-அ) ஒரு சமயம் யமுனையில் விளையாடும்போது அதன் ப்ரவாகத்தையே வேறு பக்கம் திருப்பி ஓடச்செய்தவர்.

17. பல: (பு-அ) கர்காச்சாரியார் இவருக்கு வைத்த பெயர்.

மன்மதனின் பெயர் : 19

मदनो मन्मथो मारः प्रद्युम्नो मीनकेतनः ।। 25 ।।

कन्दर्पो दर्पकोऽनङ्गः कामः पञ्चशरः स्मरः ।
शम्बरारिर्मनसिजः कुसुमेषुरनन्यजः ।। 26 ।।

पुष्पधन्वा रतिपतिर्मकरध्वज आत्मभूः ।

1. मदनः (पुं), 2. मन्मथः (पुं), 3. मारः (पुं), 4. प्रद्युम्नः (पुं), 5. मीनकेतनः (पुं), 6. कन्दर्पः (पुं), 7. दर्पकः (पुं), 8. अनङ्गः (पुं), 9. कामः (पुं), 10. पञ्चशरः (पुं), 11. स्मरः (पुं), 12. शम्बरारिः (पुं), 13. मनसिजः (पुं), 14. कुसुमेषु (पुं), 15. अनन्यजः (पुं), 16. पुष्पधन्वन् (पुं),

17. रतिपतिः (पुं), 18. मकरध्वजः (पुं), 19. आत्मभूः (पुं)
இந்த பத்தொன்பதும் மன்மதன் பேர்கள்

1. மதந: (பு-அ) திமிரை வளர்ப்பவன்.

2. மன்மத: (பு-அ) மனதைக் கலக்குபவர்.

3. மார: (பு-அ) மன்மதனுடைய ஆக்கத்தாலே உயிரை விட்டவர்களும் உண்டு. ஆகவே "கொல்பவன்" என்று பெயர்.

4. ப்ரத்யும்ந: (பு-அ) கிருஷ்ணனுக்கு ருக்மிணியிடம் மன்மதன் பிறந்தான். அவன் பெயர் "ப்ரத்யும்நன்".

5. மீநகேதன: (பு-அ) மீன் கொடியோன்.

6. கந்தர்ப: (பு-அ) போற்றத் தக்க கர்வமுடையவன்.

7. தர்பக: (பு-அ) அற்பமான கர்வமுடையவன்.

8. அனங்க: (பு-அ) உடலில்லாது உயிரோடு இருப்பவன்.

9. காம: (பு-அ) காமம்-ஆசை வடிவினன். ஆதலால் இப்பெயர்.

10. பஞ்சசர: (பு-அ) ஐந்து அம்புகளை உடையவன்.

அவையாவன: **உந்மாதநம்** - அளவற்ற காமவெறி. **தாபநம்** - அதனால் உண்டான எரிச்சல், **சோஷகம்** - அதனால் உடல் வற்றி இளைப்பது **ஸ்தம்பநம்** - என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நிற்பது. **ஸம்மோஹநம்** - பகுத்தறிவை இழப்பது. இவை காமவெறி பிடித்தவரிடம் ஏற்படுகின்ற மாற்றங்கள்.

11. ஸ்மர: (பு-அ) நினைவு முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டவன்.

12. சம்பாரி: (பு-இ) சம்பரன் என்ற அஸுரனை வென்றவன்.

13. மனஸிஜ: (பு-இ) ஒருவனுடைய மனதுதான் ஆசைகளின் களம். அங்கு தோன்றியவன்.

14. குஸுமேஷு: (பு-அ) மலர்களை அம்புகளாக உடையவன்.

15. அநந்யஜ: (பு-அ) தனக்கு ஈடு இணையாக மேன்மையாக எவரும் இல்லாத தனிப்பட்டவர். அநந்யர் - விஷ்ணு - அவருடைய புதல்வர்.

16. புஷ்பதந்வா (பு-ந்) மலர்களால் ஆன வில்லை ஏந்தியவர். மன்மதனுடைய அம்பு மலர்களாவன: 1. தாமரை, 2. அசோகம், 3. மாம்பூ, 4. மல்லிகை, 5. நீல ஆம்பல்.

17. ரதிபதி: (பு-இ) ரதியின் கணவன்.

18. மகரத்வஜ: (பு-அ) மீன் கொடியோன்.

19. ஆத்மபூ: (பு-ஊ) தான்தோன்றி.

மன்மதனின் புதல்வன் பெயர் : 4

ब्रह्मसूर्विश्वकेतुः स्यादनिरुद्ध उषापतिः ।। 27

1. ब्रह्मसूः (पुं), 2. विश्वकेतुः (पुं), 3. अनिरुद्धः (पुं), 4. उषापतिः (पुं).

1. ப்ரம்ஸூ: (பு-ஊ) விஷ்ணுவின் அம்சங்களான நால்வரில் அநிருத்தர் என்ற அம்சத்தில் ப்ரம்மா தோன்றினார் என்று மரபு.

2. விச்வகேது: (பு-ஊ) உலகையே கொடியாக்க கொண்டவர்.

3. அநிருத்த: (பு-அ) கண்ணன் புதல்வனான ப்ரத்யும்நனின் குமாரன்.

4. உஷாபதி: (பு-இ) பாணாஸுரனின் மகளான உஷாதேவியின் கணவன்.

लक्ष्मी पद्मालयापद्मा कमला श्रीर्हरिप्रिया ।
(इन्दिरा लोकमाता मा क्षीरोदतनया रमा ।। 28।।
भार्गवी लोकजननी क्षीरसागरकन्यका ।) 29 ।।

1. लक्ष्मीः (स्त्री), 2. पद्मालया (स्त्री), 3. पद्मा (स्त्री), 4. कमला (स्त्री), 5. श्रीः (स्त्री), 6. हरिप्रिया (स्त्री), 7. इन्दिरा (स्त्री), 8. लोकमाता (स्त्री), 9. मा (स्त्री), 10. क्षीरोदतनया (स्त्री), 11. रमा (स्त्री), 12. भार्गवी (स्त्री), 13. लोकजननी (स्त्री), 14. क्षीरसागरकन्यका (स्त्री) இவைகள் லக்ஷ்மியின் பெயர்.

1. லக்ஷ்மீ: (பெ-ஈ) உலகில் உள்ள எந்தப் பொருளிலும் எப்போதாவது பொலிவு இருக்குமானால் அந்தப் பொலிவே லக்ஷ்மீ.

2. பத்மாலயா (பெ-ஆ) தாமரையில் அமர்ந்தவள்.

3. பத்மா (பெ-ஆ) தாமரைச்செல்வி.

4. கமலா (பெ-ஆ) தாமரைச்செல்வி.

5. ஸ்ரீ: (பெ-ஈ) அனைவருடைய, 'அடையவேண்டும் என்ற வலிவான விருப்பத்திற்கு' உரியவள்.

6. ஹரிப்ரியா (பெ-ஆ) மஹாவிஷ்ணுவின் மனைவி.

7. இந்திரா (பெ-ஆ) ஊக்கமளிப்பவள்.

8. லோகமாதா (பெ-ரு) உலகங்களுக்குத் தாய்.

9. மா (பெ-ஆ) அளவின் உச்ச நிலையில் உள்ளவள்.

10. க்ஷீரோத தனயா (பெ-ஆ) பாற்கடலின் மகள்.

11. ரமா (பெ-ஆ) அவளிருக்கும் இடமெல்லாம் கொண்டாட்டம்தான்.

12. பார்கவீ (பெ-ஈ) ப்ருகு கோத்திரத்தில் தோன்றியவள்.

13. லோகஜநநீ (பெ-ஈ) உலகங்களுக்குத் தாய்.

14. க்ஷீரஸாகரகந்யகா (பெ-ஆ) பாற்கடலின் மகள்

இந்த பதிநான்கும் லக்ஷ்மியின் பெயர்கள்.

விஷ்ணுவின் ஆயுதங்கள் : 7

शङ्खो लक्ष्मीपतेःपाञ्चजन्यश्चक्रं सुदर्शनम् ।
कौमोदकी गदा खड्गो नन्दकः कौस्तुभोमणिः ।। 30
(चापं शाङ्र्गं मुरारेस्तु श्रीवत्सो लाञ्छनं स्मृतम् ।) 31

1. पाञ्चजन्यः (पुं), 2. सुदर्शनम् (न), 3. कौमोदकी (स्त्री), 4. नन्दकः (पुं), 5. कौस्तुभः (पुं), 6. शाङ्र्गं (न), 7. श्रीवत्सः (पुं)

1. பாஞ்சஜந்ய: (பு-அ) லக்ஷ்மீபதியான நாராயணன் கையில் உள்ள சங்கத்தின் பெயர். பாஞ்சஜந்ய: -- சங்கத்தில் புகுந்துகொண்ட பஞ்சஜநன் என்ற அஸுரனை வதைத்து அதை ஊதுகுழலாகக் கையில் ஏந்தினார். இது தூய்மையானது என்றும், அதன் உட்புறத்தில் ஐந்து கோடுகள் மேல்நோக்கிச் செல்லும் என்றும், ஆகம நூல்களில் கூறப்படுகின்றது.

2. ஸுதர்சநம் (ந-அ) ரதத்தின் சக்கரங்கள்போல ஆயிரம் வட்டாக்கள் (ஆரங்கள்) உடைய நாராயணனின் சக்கரத்தின் பெயர் ஸுதர்சனம். அதன் ஒளி கவர்ச்சி மிக்கது.

3. கௌமோதகீ (பெ-ஈ) விஷ்ணுவின் கதாயுதத்திற்குப் பெயர் கௌமோதகீ.

4. நந்தக: (பு-அ) விஷ்ணுவின் பட்டாக்கத்தியின் பெயர் நந்தகம்.

5. கௌஸ்துப: (பு-அ) விஷ்ணுவின் கழுத்தில் உள்ள ரத்னஹாரத்தில் நடுநாயகமாக விளங்குவதுகௌஸ்துபம் என்ற ரத்னம். அமுதத்திற்காக பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்டது இது.

6. சார்ங்கம் (ந-அ) சார்ங்கம் என்று விஷ்ணுவின் வில்லின் பெயர். (இதன் விளக்கம் விஷ்ணுவின் பெயரில் காண்க).

7. ஸ்ரீவத்ஸ: (பு-அ) விஷ்ணுவின் மார்பில் உள்ள மருவின் பெயர். (இதன் விளக்கம் விஷ்ணுவின் பெயரில் காண்க).

விஷ்ணுவின் வாஹனமான கருடனின் பெயர்கள்: 9

गरुत्मान् गरुडस्तार्क्ष्यो वैनतेयः खगेश्वरः ।
नागान्तको विष्णुरथः सुपर्णः पन्नगाशनः ।। 32

1. गरुत्मान् (पुं), 2. गरुडः (पुं), 3.तार्क्ष्यः (पुं), 4. वैनतेयः (पुं), 5. खगेश्वरः (पुं), 6. नागान्तकः (पुं), 7. विष्णुरथः (पुं), 8. सुपर्णः (पुं), 9. पन्नगाशनः (पुं),

1. கருத்மான் (பு-த்) இறக்கைகளை உடையவர்.

2. கருட: (பு-அ) இறக்கைகளால் பறக்கின்றவர்.

3. தார்க்ஷ்ய: (பு-அ) தார்க்ஷ்யர் என்ற காஸ்யப முனிவரின் மகன்.

4. வைநதேய: (பு-அ) காச்யப முனிவரின் மனைவியின் புதல்வன்.

5. ககேச்வர: (பு-அ) பறவைகளுக்குத் தலைவன்.

6. நாகாந்தக: (பு-அ) பாம்புகளைக் கொல்பன்.

7. விஷ்ணுரத: (பு-அ)விஷ்ணுவிற்கு வாஹனமானவர்.

8. ஸுபர்ண:(பு-அ) அழகான/வலுவான இறக்கைகளை கொண்டவர்.

9. பந்நகாசந: (பு-அ) பாம்புகளை உண்பவர்.

இதுவரை கருடனின் பெயர்கள்.

சிவபெருமானின் பெயர்கள் : 48.

शम्भुरीशः पशुपतिः शिवः शूली महेश्वरः ।
ईश्वरः शर्व ईशानः शङ्करश्चन्द्रशेखरः ।। 33

भूतेशः खण्डपरशुर्गिरीशो गिरिशो मृडः ।
मृत्युञ्जयः कृत्तिवासाः पिनाकी प्रमथाधिपः ।। 34

उग्रः कपर्दी श्रीकण्ठः शितिकण्ठः कपालभृत् ।
वामदेवो महादेवो विरूपाक्षस्त्रिलोचनः ।। 35

कृशानुरेताः सर्वज्ञो धूर्जटिर्नीललोहितः ।
हरः स्मरहरो भर्गस्त्र्यम्बकस्त्रिपुरान्तकः ।। 36

गङ्गाधरोऽन्तकरिपुः क्रतुध्वंसी वृषध्वजः ।
व्योमकेशो भवो भीमः स्थाणू रुद्र उमापतिः ।। 37

1. शम्भुः (पुं), 2. ईशः (पुं), 3. पशुपतिः (पुं), 4. शिवः (पुं), 5. शूली (पुं), 6. महेश्वरः (पुं), 7. ईश्वरः (पुं), 8. शर्वः (पुं), 9. ईशानः (पुं), 10. शङ्करः (पुं), 11. चन्द्रशेखरः (पुं), 12. भूतेशः (पुं), 13. खण्डपुरशुः (पुं), 14. गिरीशः (पुं), 15. गिरिशः (पुं), 16. मृडः (पुं), 17. मृत्युञ्जयः (पुं), 18. कृत्तिवासाः (पुं), 19. पिनाकी (पुं), 20. प्रमथाधिपः (पुं), 21. उग्रः (पुं), 22. कपर्दी (पुं), 23. श्रीकण्ठः (पुं), 24. शितिकण्ठः (पुं), 25. कपालभृत् (पुं), 26. वामदेवः (पुं), 27. महादेवः (पुं), 28. विरूपाक्षः (पुं), 29. त्रिलोचनः (पुं), 30. कृतानुरेताः (पुं), 31. सर्वज्ञः (पुं), 32. धूर्जटिः (पुं), 33. नीललोहितः (पुं), 34. हरः (पुं),

35. स्मरहरः (पुं), 36. भर्गः (पुं), 37. त्र्यम्बकः (पुं), 38. त्रिपुरान्तकः(पुं), 39. गङ्गाधरः(पुं), 40. अन्तकरिपुः (पुं), 41. क्रतुध्वंसी (पुं), 42. वृषध्वजः (पुं), 43. व्योमकेशः (पुं), 44. भवः (पुं), 45. भीमः (पुं), 46. स्थाणुः(पुं), 47. रुद्रः (पुं), 48. उमापतिः (पुं).

1. சம்பு: (பு-உ) மங்களங்களின் உற்பத்தி நிலையம்.

2. ஈச: (பு-அ) ஆண்டவன்.

3. பசுபதி: (பு-இ) சைவ சமயத்தில் ஜீவர்களை'பசு' என்று அழைப்பார்கள். அந்த ஜீவர்களின் தலைவர்.

4. சிவ: (பு-அ) மங்களம் ஆனவன். நல்லோர்களின் உறைவிடம்.

5. சூலீ: (பு-ந்) திரிசூலத்தை ஆயுதமாகக் கொண்டவர்.

6. மஹேச்வர: (பு-அ) சிறந்த ஆளுமையுடையவர்.

7. ஈச்வர: (பு-அ) ஆளுமையுடையவர்.

8. சர்வ: (பு-அ) ப்ரளயகாலத்தில் உலகனைத்தையும் சிதைப்பவர்.

9. ஈசாந: (பு-அ) வடமேற்கு திசையின் அதிபர். பரமேச்வரனின் ஐந்து முகங்களில் வடக்கு நோக்கியுள்ள முகமுடையவர்.

10. சங்கர: (பு-அ) அனைவருக்கும் மங்களத்தை அளிப்பவர்.

11. சந்த்ரசேகர: (பு-அ) சந்திரனை தலை அலங்கார மாகக் கொண்டவர்.

12. பூதேச: (பு-அ) முன்பு கூறின தேவாம்சம் பொருந்தியவர் வகைகளில் ஒருவகையான பூதங்களின் தலைவர்.

13. கண்டபரசு: (பு-அ) துண்டாடும் கோடரியை ஏந்தியவர்.

14. கிரீச: (பு-அ) கைலாசமலைக்குத் தலைவர்.

15. கிரிச: (பு-அ) கைலாசத்தில் சயனிக்கின்றவர்.

16. ம்ருட: (பு-அ) பக்தர்களை சுகமாக இருக்கச் செய்பவர்

17. ம்ருத்யுஞ்ஜய: (பு-அ) மரண தேவதையான யமனை வென்றவர். (மார்க்கண்டேய சரித்திரத்தில் காணலாம்.)

18. க்ருத்திவாஸா: (பு-ஸ்) யானைத்தோலை ஆடையாக உடையவர். தாருக வனத்து முனிவர்கள் யாகம் செய்தபோது அங்கு பைராகி வேஷத்தில் சென்ற பரமேச்வரன்மீது ஏவல்-மந்திரம் ஹோமம் செய்து பெரிய யானையை உண்டாக்கி அதை பரமேச்வரன்மீது ஏவியபோது அதைக் கிழித்து உடலைப் புதுக்கி எறிந்து அதன் தோலை ஆடையாகப் புனைந்தார் என்று வரலாறு உண்டு.

19. பிநாகி (பு-அ) பிநாகம் என்ற பெயர் கொண்ட வில்லை உடையவர்.

20. ப்ரமதாதிப: (பு-அ) பூதகணங்களின் ஒருவகையான ப்ரமத கணங்களின் தலைவர்.

21. உக்ர: (பு-அ) கொடுமையாகக் காட்சியளிப்பவர்.

22. கபர்தீ (பு-அ) சடையாண்டி.

23,. ஸ்ரீகண்ட: (பு-அ) ஆலகால விஷத்தைக் கழுத்திலேயே தேக்கிக்கொண்டு அதனால் பொலிவுபெற்ற கழுத்தை உடையவர்.

24. சிதிகண்ட: (பு-அ) மேலே கூறியதே-கறுத்த கழுத்தை உடையவர்.

25. கபாலப்ருத் (பு-த்) மனித மண்டையோட்டைக் கையில் ஏந்தியவர்.

26. வாமதேவ: (பு-அ) உலக இயலுக்கு அப்பாற்பட்ட

லீலைகளைச் செய்தவர். பரமேச்வரனின் ஐந்து முகங்களில் ஒன்று வாமதேவம்.

27. மஹாதேவ: (பு-அ) பெரிய ஆண்டவர்.

28. விருபாக்ஷ: (பு-அ) முக்கண்ணனான பரமேச்வர னுடைய நெற்றிக்கண் மேல்நோக்கி இருப்பதால் பொருத்த மற்ற கண்ணை உடையவன்.

29. த்ரிலோசந: (பு-அ) மூன்று கண்களையுடையவர்.

30. க்ருசானுரேதா: (பு-ஸ்) அக்னியை விந்துவாக உடையவர்.

31. ஸர்வஜ்ஞ: (பு-அ) அனைத்தும் அறிந்தவர். இது வெறும் காரணப்பெயர் அல்ல. குறிப்பிட்ட பெயர்.

32. தூர்ஜடி: (பு-இ) (மயானச்சாம்பல்) தூசிபடிந்த சடையுடையவர். சுமைபோலுள்ள ஜடையை உடையவர்.

33. நீலலோஹித: (பு-அ) ப்ரம்ஹா ஹோமம் செய்யும்போது நெற்றி வியர்வையிலிருந்து தோன்றிய தேஜஸ் அக்னியில் விழுந்தது. அதிலிருந்து நீலவண்ணமும், பின் சிவப்பு வண்ணமுமாயிற்று. அதிலிருந்து தோன்றியவர்.

34. ஹர: (பு-அ) ப்ரளயகாலத்தில் அனைத்தையும் தன்னுள் இழுத்துக்கொள்பவர்.

35. ஸ்மரஹர: (பு-அ) மன்மதனை அழித்தவர்.

36. பர்க: (பு-அ) அறியாமையை வருத்து எடுத்து ஒளியைத் தருபவர். இதுவே காயத்ரீ மந்திரத்தில் வரும் 'பர்க' என்ற சொல்லுக்குப் பொருள்.

37. த்ரயம்பக: (பு-அ) மூன்று கண்களையுடையவர்.

38. த்ரிபுராந்தக: (பு-அ) முப்புறத்தை ஒழித்தவர்.

39. கங்காதர: (பு-அ) கங்கையைத் தலையில் தாங்கியவர்.

40. அந்தகரிபு: (பு-உ) யமனுக்கு எதிரி.

41. க்ரது த்வம்ஸீ (பு-ந்) தாருகாவனத்து முனிவர்களின் கொடிய வேள்வியை ஒழித்தவர்.

42. வ்ருஷத்வஜ: (பு-அ) இடபக்கொடியோன்.

43. வ்யோமகேச: (பு-அ) வ்யோம எனில் ஆகாசம். ஒன்றுமில்லாதது என்று பொருள். அதாவது மொட்டை அடித்துக்கொண்டிருப்பவர் என்று பெயர். ஸ்ரீருத்ர பாஷ்யம் காண்க.

44. பவ: (பு-அ) என்றும் இருப்பவர்.

45. பீம: (பு-அ) சில நேரங்களில் பயமுறுத்துகின்ற தோற்றமுடையவர்.

46. ஸ்தாணு: (பு-உ) நிலைத்து நிற்பவர்.

47. ருத்ர: (பு-அ) எதிரிகளை (சத்ருக்களை) அழும்படிச் செய்பவர்.

48. உமாபதி: (பு-இ) உமாதேவியின் கணவர்.

சிவபெருமான் சடை மற்றும் வில்லின் பெயர்: 3

कपर्दोऽस्य जटाजूटः पिनाकोऽजकवं धनुः ।

1. क़पर्दः (पुं), சிவனின் சடை, 2. पिनाकः (पुं), 3. अजकवं (न) இரண்டும் வில்லின் பெயர்.

சடையின் பெயர்: 1

1. கபர்த: (பு-அ) தண்ணீர் கோத்துக் கொண்டிருக்கின்ற சிவன் சடைக்கு "கபர்தம்" என்று பெயர். கவ்யங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது.

வில்லின் பெயர்: 2

2. பிநாக: (பு-அ) சிவபெருமானின் வில்லின்பெயர் "பிநாகம்" மேருமலையே சிவனுக்கு வில்லாக வந்தது. அதன் பின்னால் திரிபுரர்களின் கண்களுக்கு அகப்படாமல் தேவலோகத்தில் மறைந்தது.

3. அஜகவம் (ந-அ) அந்த வில்லின் மேல்முனையில் பிரம்மதேவனும், கீழ்முனையில் விஷ்ணுவும் இருந்து அதைநிலை நிறுத்தினர். இச்சொல்லை अजगवम् என்றும் மாற்றிக் கூறுவதுண்டு.

சிவகணங்களின் பெயர் : 2

प्रमथाः स्युः पारिषदा . . . . . . ।

1. प्रमथाः (पुं), 2. पारिषदा (पुं)

சிவனின் அவையோர்.

1. ப்ரமதா: (பு-அ/பன்மை) சிவனின் அவை அங்கத்தினர்கள்.

2. பாரிஷதா: (பு-அ/பன்மை) சிவபெருமானின் ஸபையில் இருக்கும் ஸாதுக்களுக்கு பாரிஷதர்கள் என்று பெயர். அவர்கள்: சண்டீஸ்வரர், நந்தி, மஹாகாளர், ப்ருங்கி முதலியோர்.

ஏழு மாதர்கள்:

. . . . ब्राह्मीत्याद्यास्तु मातरः ।। 38

(ब्राह्मी माहेश्वरी चैव कौमारी वैष्णवी तथा ।
वाराही चैव माहेन्द्री चामुण्डा सप्त मातरः ।।) 39

சுவடியில் இல்லை.

பிராஹ்மீ முதலான ஏழு (எட்டு) தாய்மார்கள். அந்தந்த தெய்வங்களின் சக்தி வடிவங்கள்.

ப்ராஹ்மீ (பெ-ஈ) பிர்மதேவனின் சக்தி.

மாஹேச்வரீ (பெ-ஈ) பரமேச்வரனின் சக்தி.

ஐந்த்ரீ (பெ-ஈ) இந்திரனின் சக்தி.

வாராஹீ (பெ-ஈ) வராஹப் பெருமாளின் சக்தி

வைஷ்ணவீ (பெ-ஈ) விஷ்ணுவின் சக்தி.

கௌமாரீ (பெ-ஈ) குமரக்கடவுளின் சக்தி.

சாமுண்டா (பெ-ஆ) சண்ட-முண்டர்கள் என்ற அசுரர்களை மாய்த்த சாமுண்டா என்ற தனிப்பட்ட சக்தி என்று ஏழு மாதர்கள் என்றொரு கணக்கு உண்டு. चर्चिका சர்ச்சிகா என்று மற்றொரு சக்தி வடிவமும் உண்டு.

தெய்வங்களின் வல்லமை

विभूतिर्भूतिरैश्वर्यमणिमादिकमष्टधा ।। 40

(अणिमा महिमा चैव गरिमा लघिमा तथा ।

प्राप्तिः प्राकाम्यमीशित्वं वशित्वं चाष्टधा स्मृतम् ।। 41

சுவடியில் இல்லை.

1. अणिमा (पुं/न), 2. महिमा (पुं/न), 3. लघिमा (पुं/न), 4. गरिमा (पुं/न), 5. प्राप्तिः (स्त्री), 6. प्राकाम्यं (न), 7. ईशित्वं (न), 8. वशित्वं (न).

ப்ரம்மா, விஷ்ணு, சிவன், முருகன் முதலிய எல்லா தெய்வங்களின் வல்லமைக்கு மூன்று பெயர்கள். விபூதி, பூதி, ஐச்வர்யம் என்று. இந்த வல்லமைகள் எட்டு வகைப்படும். அவையாவன :

1. அணிமா (பு-ந-ந்) புலன்களுக்கு அகப்படாத நுண் பொருளாகும் தன்மை.

2. மஹிமா (பு-ந-ந்) அளவில் அடங்காத மிகப் பெரியதாகும் தன்மை.

3. லஹிமா (பு-ந-ந்) எடைபோடமுடியாத மிக நுண்ணியதாகும் தன்மை.

4. கரிமா (பு-ந-ந்) எடை போடமுடியாத கனமுள்ள தன்மை.

5. ப்ராப்தி: (பெ-இ) எந்த இடத்தையும் நொடியில் அணுகும் தன்மை.

6. ப்ராகாம்யம் (ந-அ) மிகப் பெரிய திட்டம்போடும் தன்மை.

7. ஈசித்வம் (ந-அ) அடக்கியாளும் தன்மை.

8. வ்சித்வம் (ந-அ) எதையும் வசீகரிக்கும் தன்மை.

சிவபெருமானின் தேவியின் பெயர் : 25

उमा कात्यायनी गौरी काली हैमवतीश्वरी ।
शिवा भवानी रुद्राणी शर्वाणी सर्वमङ्गळा ।। 42

अपर्णा पार्वती दुर्गा मृडानी चण्डिकाम्बिका ।
(आर्या दाक्षायणी चैव गिरिजा मेनकात्मजा ।। 43

सती च कालरात्री च भैरवी गणनायिका ।) 44

1. उमा (स्त्री), 2. कात्यायनी (स्त्री), 3. गौरी (स्त्री), 4. काली (स्त्री), 5. हैमवती (स्त्री), 6. ईश्वरी (स्त्री), 7. शिवा (स्त्री), 8. भवानी (स्त्री), 9. रुद्राणी (स्त्री), 10. शर्वाणी (स्त्री), 11. सर्वमङ्गला(स्त्री), 12. अपर्णा (स्त्री), 13. पार्वती (स्त्री), 14. दुर्गा (स्त्री), 15. मृडानी (स्त्री), 16. चण्डिका(स्त्री), 17. अम्बिका(स्त्री), 18. आर्या (स्त्री), 19. दाक्षायणी(स्त्री), 20. गिरिजा(स्त्री), 21. मेनकात्मजा(स्त्री), 22. सती (स्त्री), 23. कालरात्री (स्त्री), 24. भैरवी (स्त्री), 25. गणनायिका (स्त्री). இவைகள் 25-ம் சிவபெருமானின் தேவியின் பெயர்கள்.

1. உமா (பெ-ஆ) பார்வதிதேவி சிவனைக் குறித்துத் தவம் செய்ய அவள் தாயிடம் அனுமதி கேட்க, அவளது தாய், "ஓ பெண்ணே! நீ தவம் செய்யக்கூடாது" என்று தடுக்க, அதுவே "உமா" என்ற பெயருண்டாயிற்று. "உ" ஒலிக்குறிப்பு விளிச்சொல்; "மா" என்ற சொல் வேண்டாம்--கூடாது என்றும், காக்கின்றவள் என்றும் பொருள்.

2. காத்யாயநீ (பெ-ஈ) மோக்ஷம் அடைவதற்குரிய வழிகள் எத்தனை என்று எண்ணிப் பார்த்த முனிவர் காத்யாயநர். அவருடைய கோத்திரத்தில் அவதரித்தவள்.

3. கௌரீ (பெ-ஈ) வெண்மையான வண்ணமுடையவள். எட்டு வயதுச் சிறுமி.

4. காளீ (பெ-ஈ) கருமை/நீல வண்ணமுடையவள்.

5. ஹைமவதீ (பெ-ஈ) ஹிமவானின் மகள்.

6. ஈச்வரீ (பெ-ஈ) ஆளுமையுடையவள்.

7. சிவா (பெ-ஆ) மங்களமானவள். சிவபெருமானின் மனைவி.

8. பவாநீ (பெ-ஈ) பவன்-சிவன்; அவனுடைய மனைவி.

9. ருத்ராணீ (பெ-ஈ) ருத்ரனின் மனைவி.

10. சர்வாணீ (பெ-ஈ) சர்வனின் (சிவன்) மனைவி.

11. ஸர்வமங்களா (பெ-ஆ) எல்லா மங்களங்களும் உடையவள்.

12. அபர்ணா (பெ-ஆ) இலைகளைக்கூட உண்ணாமல் தவம் செய்தவள்; கடனை நீக்குபவள்.

13. பார்வதீ (பெ-ஈ) மலையரசனின் மகள் பார்வதீ.

14. துர்கா (பெ-ஆ) 1. மிகவும் கஷ்டப்பட்டு அடையத் தக்கவள்; 2. காடு, மலை போன்ற கோட்டைகளைத் தனது இருப்பிடமாகக் கொண்டவள்.

15. ம்ருடாநீ (பெ-ஈ) பரமசிவனின் மனைவி.

16. சண்டிகா (பெ-ஆ) கோபங்கொண்டவள். சண்டன் என்ற அஸுரனை அழித்தவள்.

17. அம்பிகா (பெ-ஆ) 1. எல்லாவற்றையும் தோற்றுவிப்பவள். 2. அனைத்துலகங்களுக்கும் தாய்.

18. ஆர்யா (பெ-ஆ) சான்றுள்ளவள்.

19. தாக்ஷாயணீ (பெ-ஈ) தக்ஷப்ரஜாபதியின் மகள்.

20. கிரிஜா (பெ-ஆ) மலையில் தோன்றியவள்.

21. மேநகாத்மஜா (பெ-ஆ) மலையரசன் மனைவி மேனையிடம் தோன்றியவள்.

22. ஸதீ (பெ-ஈ) தக்ஷனின் மகளாகப் பிறந்தபோது அவளுக்கு 'ஸதீ' என்று பெயர்.

23. காலராத்ரி: (பெ-இ) யுக முடிவில்--பிரளய காலத்தில்-- தோன்றும் முழு இரவின் வடிவானவள்.

24. பைரவீ (பெ-ஈ) பயங்கரமான சப்தத்தை உடையவர் பைரவர். இவர் பரமேச்வரனின் ஒரு அம்சம். இவருடைய மனைவி.

25. கணநாயிகா (பெ-ஆ) ப்ரமத கணங்களுக்குத் தலைவி. (சிவனின் மனைவி என்ற தகுதியினால்).

விநாயகரின் பெயர் : 8

विनायको विघ्नराजद्वैमातुरगणाधिपाः ।
अप्येकदन्त हेरम्ब लम्बोदर गजाननाः ।। 45

1. विनायकः (पुं), 2. विघ्नराजः (पुं), 3. द्वैमातुरः (पुं), 4. गणाधिपः (पुं), 5. एकदन्तः (पुं), 6. हेरम्बः (पुं), 7. लम्बोदरः (पुं), 8. गजाननाः (पुं), இந்த எட்டும் விநாயகரின் பேர்.

1. விநாயக: (பு-அ) 1. தனக்குத் தலைவரில்லாதவர். 2. வணக்கத்தைக் கற்றுக்கொடுப்பவர்.

2. விக்நராஜ: (பு-அ) இடையூறுகளை ஆள்பவர். தவறான வழியில் செல்பவருக்கு இடையூறு உண்டாக்கி நல்வழிப்படுத்துபவர்.

3. த்வைமாதுர: (பு-அ) பெண் யானை, பார்வதீ ஆகிய இருவரையும் தனது தாயாகக் கொண்டவர்.

4. கணாதிப: (பு-அ) சிவகணங்களான ப்ரமதாதி கணங்களுக்குத் தலைவன்.

5. ஏகதந்த: (பு-அ) வியாசர் கூறிய மஹாபாரதத்தை எழுதுவதற்காகத் தன் ஒரு தந்தத்தை ஒடித்து எழுதுகோலாக்கிக் கொண்டவர்.

6. ஹேரம்ப: (பு-அ) 1. சிவபெருமானின் மடியில் அமர்ந்தவர். 2. தனது அடியார்களுக்கு மேன்மையை வளர்ப்பவர்.

7. லம்போதர: (பு-அ) தொங்கும் வயிறுடையவர்.

8. கஜாநந: (பு-அ) யானை முகம் உடையவர்.

முருகனின் பெயர் : 17

कार्त्तिकेयो महासेनः शरजन्मा षडाननः ।
पार्वतीनन्दनः स्कन्दः सेनानीरग्निभूर्गुहः ।। 46

बाहुलेयस्तारकजिद् विशाखः शिखिवाहनः ।
षाण्मातुरः शक्तिधरः कुमारः क्रौञ्चदारणः ।। 47

1. कार्त्तिकेयः (पुं), 2. महासेनः (पुं), 3. शरजन्मा (पुं), 4. षडाननः (पुं), 5. पार्वतीनन्दनः (पुं), 6. स्कन्दः (पुं), 7. सेनानीः(पुं), 8. अग्निभूः(पुं), 9. गुहः (पुं), 10. बाहुलेयः (पुं)

11.तारकजित् (पुं), 12. विशाखः (पुं), 13. शिखिवाहनः (पुं), 14. षाण्मातुरः (पुं), 15. शक्तिधरः (पुं), 16. कुमारः (पुं), 17. क्रौञ्चदारणः (पुं).

1. கார்த்திகேய: (பு-அ) க்ருத்திகைப் பெண்களின் மகன்.

2. மஹாஸேந: (பு-அ) மிகப்பெரிய சேனைகளை உடையவர்.

3. சரஜன்மா (பு-ந்) சரம் என்ற வகைப் புல்லில் (தருப்பைப் புல்) நாணலில் பிறந்தவர்.

4. ஷடாநந: (பு-அ) ஆறுமுகத்தோன்.

5. பார்வதீநந்தந: (பு-அ) பார்வதியின் குமாரன்.

6. ஸ்கந்த: (பு-அ) அக்நியின் கருவிலிருந்து நழுவியவர்.

7. ஸேநாநீ: (பு-ஈ) தேவர்களின் படைகளை நடத்து கின்றவர். சேனாபதி.

8. அக்னிபூ: (பு-ஊ) அக்நியில் உதித்தவர்.

9. குஹ: (பு-அ) இதய குஹையில் மறைந்திருப்பவர்.

10. பாஹுலேய:(பு-அ) க்ருத்திகா தேவிகளின் புதல்வர்.

11. தாரகஜித் (பு-த்) தாரகாசுரனை வெற்றிகொண்டவர்.

12.. விசாக: (பு-அ) விசாக நக்ஷத்திரத்தில் பிறந்தவர்.

13. சிகிவாஹந: (பு-அ) மயிலை வாஹனமாகக் கொண்டவர்.

14. ஷாண்மாதுர: (பு-அ) ஆறு தாய்மார்களுக்குப் புத்திரனாக விளங்குபவர்.

15. சக்திதர: (பு-அ) சக்தி என்னும் ஆயுதத்தைக் கையில் கொண்டவர்.

16. குமார: (பு-அ) எப்பொழுதும் பாலப் பருவத்திலேயே திகழ்பவர். கெட்ட எண்ணம் உள்ளவருக்கு எமன்.

17. க்ரௌஞ்சதாரண: (பு-அ) க்ரௌஞ்சம் என்னும் மலையைப் பிளந்தவர்.

इन्द्रो मरुत्वान् मघवा बिडौजाः पाकशासनः।
वृद्धश्रवाः शुनासीरः पुरुहूतः पुरन्दरः ।। 48

जिष्णुर्लेखर्षभः शक्रः शतमन्युर्दिवस्पतिः ।
सुत्रामा गोत्रभिद् वज्री वासवो वृत्रहा वृषा ।। 49

वास्तोष्पतिः सुरपतिर्बलारातिः शचीपतिः ।
जम्भभेदी हरिहयः स्वाराण्नमुचिसूदनः ।। 50

संक्रन्दनो दुश्च्यवनस्तुराषाण्मेघवाहनः ।
आखण्डलः सहस्राक्ष ऋभुक्षाः . . . . ।। 51

1. इन्द्रः (पुं), 2. मरुत्वान् (पुं), 3. मघवन् (पुं), 4. बिडौजाः (पुं), 5. पाकशासनः (पुं), 6. वृद्धश्रवाः (पुं), 7. शुनासीरः (पुं), 8. पुरुहूतः (पुं), 9. पुरन्दरः (पुं), 10. जिष्णुः (पुं), 11. लेखर्षभः (पुं), 12. शक्रः (पुं), 13. शतमन्युः (पुं), 14. दिवस्पतिः (पुं), 15. सुत्रामा (पुं), 16. गोत्रभिद् (पुं), 17. वज्री (पुं), 18. वासवः (पुं), 19. वृत्रहा (पुं), 20. वृषा (पुं), 21. वास्तोष्पतिः (पुं), 22. सुरपतिः (पुं), 23. बलारातिः (पुं), 24. शचीपतिः (पुं), 25. जम्भभेदीः (पुं), 26. हरिहयः (पुं), 27. सवाराट् (पुं), 28. नमुचिसूदनः (पुं), 29. संक्रन्दनः (पुं), 30. दुश्च्यवनः (पुं), 31. तुराषाट् (पुं), 32. मेघवाहनः (पुं), 33. आखण्डलः (पुं), 34. सहस्त्रांक्षः (पुं), 35. ऋभुक्षाः (पुं).

1. இந்த்ர: (பு-அ) ஊக்கமுடையவன்.

2. மருத்வான் (பு-த்) மருத் என்ற 49 திதியின் மைந்தர்களைத் துணை கொண்டவன்.

3. மகவந் (பு-ந்) 1. அனைவராலும் பூஜிக்கப்படுகின்றவன். 2. யாகத்தின் பங்கு பெறுபவன்.

4. பிடௌஜா: (பு-ஸ்) 1. எங்கும் பரவியுள்ள தேஜஸ் உள்ளவன். 2. மலைகளின் இறக்கைகளை வெட்டியவன். ஆதலால் பறக்கும் திறன் உள்ளவர்.

5. பாகசாஸந: (பு-அ) விருத்திராஸுரனுடைய சகோதரனின் பெயர் "பாகன்". அந்த பாகாஸுரனைக் கொன்றவன். 2. திதி என்பவளின் கருவைச் சிதைத்தவன்.

6. விருத்தச்ரவா: (பு-ஸ்) முனிவர்களாலும், யோகிகளாலும், ஞானிகளாலும் கேட்கும் புகழ் படைத்தவன்.

7. ஸுநாஸீர: (பு-அ) சிறந்த போர்முனைப் படைகளை உடையவன். ஸுநாஸீர: என்று மாற்றுச் சொல்லும் உண்டு. வாயுதேவனைப் படைத்தலைவனாக உடையவன்.

8. புருஹூத: (பு-அ) யாகங்களில் அடிக்கடி அழைக்கப்படும் தேவன்.

9. புரந்தர: (பு-அ) தனது எதிரிகளின் தலைநகரை அழிப்பவன்.

10. ஜிஷ்ணு: (பு-உ) வெற்றிபெறும் தகுதியுடையவர்.

11. லேகர்ஷப: (பு-அ) தேவர்களில் சிறந்தவர்.

12. சக்ர: (பு-அ) திறன் மிக்கவர்.

13. சதமன்யு: (பு-உ) நூறு யாகங்களைச் செய்து, அந்தப் பயனை உடையவர்.

14. திவஸ்பதி: (பு-இ) ஸ்வர்கத்தின் தலைவன்.

15. ஸுத்ராமா (பு-ந்) உலகங்களை நன்கு காப்பாற்றுபவன்

16. கோத்ரபித் (பு-த்) பர்வதங்களை உடைப்பவர்.

17. வஜ்ரீ (பு-ந்) வஜ்ராயுதத்தையுடையவர்.

18. வாஸவ: (பு-அ) ரத்தினங்களையுடையவர்.

19. வ்ருத்ரஹா (பு-ந்) விருத்திராசுரனை அழித்தவர்.

20. வ்ருஷா (பு-ந்) மழை பொழியும்படிச் செய்பவன்.

21. வாஸ்தோஷ்பதி: (பு-இ) வீடுகள், ஆலயங்கள் இவற்றின் கட்டிட அமைப்புத் தேவதை-வாஸ்து-அதற்கு அதிபன்.

22. ஸுரபதி: (பு-இ) தேவர்களுக்கு அரசன்.

23. பலாராதி: (பு-இ) பலாஸுரனுக்குச் சத்ரு.

24. சசீபதி: (பு-இ) சசிதேவியின் கணவன்.

25. ஜம்பபேதீ (பு-ந்) ஜம்பன் என்ற அஸுரனை அழித்தவர்.

26. ஹரிஹய: (பு-அ) பச்சை நிறமுடைய குதிரைகளை உடையவர்.

27. ஸவாராட் (பு-ஜ்) ஸ்வர்கத்தின் அதிபதி.

28. நமுசிஸூதந: (பு-அ) நமுசி என்ற பெயருடைய ராக்ஷஸனை அழித்தவர்.

29. ஸங்க்ரந்தந: (பு-அ) எதிரிகள் (அழுமாறு) கண்ணீர் விடும்படிச் செய்பவர்.

30. துச்ச்யவந: (பு-அ) ச்யவன முனிவருக்குப் பிடிக்காதவர். "ச்யவநர்" என்ற ரிஷி தனக்கு முதுமை வந்துவிட்டது என்று அஸ்விநீ தேவர்களுடைய அருளைப்பெற்று இளமையை மீண்டும் பெற்றார். இதற்காக ஒரு யாகத்தைத் தொடங்கி, அந்த யாகத்தில் அஸ்வநீ தேவர்களுக்கும், "ஹவிஸ்" கொடுக்கலானார். இதனைத் தடுக்க, இந்திரன் கோபத்தினால் தனது வஜ்ராயுதத்தைக் கொண்டு 'ச்யவனரை'க் கொல்ல வஜ்ராயுதத்தை எடுத்ததும், அதனைத் தனது தபோபலத்தால் தடுத்து,

எடுத்த கையை அப்படியே நிறுத்திவிட்டார் என்பது புராணங்களில் காணப்படும் கதை.

31. துராஷாட் (பு-ஹ்) எதிரிகளான சத்ருக்களின் வேகத்தைத் தடுக்கும் சக்தி பெற்றவர்.

32. மேகவாஹந: (பு-அ) யானையின் உருவம் போன்ற மேகங்களைத் தனது வாஹநமாகக் கொண்டவர்.

33. ஆகண்டல: (பு-அ) எதிரிகளை அழிப்பவர்.

34. ஸஹஸ்ராக்ஷ: (பு-அ) ஆயிரம் கண்களுடையவர்

35. ருபுக்ஷா: (பு-ஸ்) தேவதைகளை வேலைகளில் ஈடுபடுத்து பவர்.

இந்திரனின் தொடர்புடையவர்கள் : 10

. . . . तस्य तु प्रिया ।। 51
पुलोमजा शचीन्द्राणी नगरी त्वमरावती ।
हय उच्चैश्रवाः सूतो मातलिर्नन्दनं वनम् ।। 52
स्यात् प्रासादो वैजयनतो जयन्तः पाकशासनिः ।

1. पुलोमजा (स्त्री), 2. शची (स्त्री), 3. इन्द्राणी (स्त्री), 4. अमरावती (स्त्री), 5. उच्चैश्रवाः (पुं), 6. मातलिः (पुं) 7. नन्दनं (न), 8. वैजयन्तः (पुं), .9. जयन्तः (पुं), 10. पाकशासनिः (पुं).

तस्य அந்த இந்திரனின் प्रिया तु மனைவியின் பெயர்கள் மூன்று.

இந்திரனின் மனைவியின் பெயர் : 3

1. புலோமஜா (பெ-ஆ) மிகுந்த உரோமங்களை உடையவர் என்பதால் அந்த முனிவருக்குப் புலோமர் என்று பெயர். அவருடைய மகள்.

2 *சசீ* (பெ-ஈ) அன்னநடையாள். (சாதம் என்ற சொல்லில் உள்ளது போன்ற உச்சரிப்பு உடையது "ச". 'இச்சகம்" என்ற சொல்லில் உள்ளது போன்ற உச்சரிப்புடையது "சீ".)

3. இந்த்ராணீ (பெ-ஈ) இந்திரனின் மனைவி.

இந்திரனின் தலைநகர் :

4. அமராவதீ (பெ-ஈ) அமரர்கள் வசிக்கும் நகரம். சுவர்கத்தின் தலைநகர்

இந்திரனின் குதிரை :

5. உச்சைச்ரவா: (பு-ஸ்) நேராக மேல்நோக்கியுள்ல காதுகளை உடைய குதிரை - இந்திரனுடையது.

இந்திரனின் தேரோட்டி :

6. மாதலி: (பு-இ) தேரோட்டுவதில் நுட்பம் அறிந்த தேவன் மாதலன். அவன் மகன் மாதலி. இந்திரனின் தேரோட்டி.

இந்திரனின் நந்தவனம் :

7. நந்தனம் (ந-அ) ஸந்தோஷிக்கச் செய்கிறது -- மகிழ்ச்சியைத் தருகிறது என்ற பொருளில் நந்தனம் என்று. இந்திரனின் தோட்டத்திற்குப் பெயர்.

இந்திரனின் மாளிகை ;

8. வைஜயந்த: (பு-அ) இந்திரனின் மாளிகை.

இந்திரன் மகனுக்கு சொற்கள் 2.

9. ஜயந்த: (பு-அ) இந்திரனின் மகன்.

10. பாகசாஸநி: (பு-இ) பாகன் என்ற அசுரனைக் கொன்றவன் இந்திரன்-பாகசாஸன். அவன் மகன்.

இந்திரனின் யானையின் பெயர்கள் : 4

ऐरावतोऽभ्रमातङ्गैरावणाभ्रमुवल्लभा ।। 53

1. ऐरावतः (पुं), 2. अभ्रमातङ्गः (पुं), 3. ऐरावणः (पुं) 4. अभ्रमुवल्लभः (पुं).

1. ஐராவத: (பு-அ) பாற்கடலைக் கடையும்போது தோன்றியது ஐராவதம்.
2. அப்ரமாதங்க: (பு-அ) மேகம்போல பெரும் வடிவுடையது.
3. ஐராவணம் (பு-அ) ஐராவதம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்.
4. அப்ரமுவல்லப: (பு-அ) அப்ரமு என்ற பெண்யானையின் புருஷன்.

இந்திரனின் ஆயுதம் : 10

ह्रादिनी वज्रमस्त्री स्यात् कुलिशं भिदुरं पविः ।

शतकोटिः स्वरुः शम्बो दम्भोलिरशनिर्द्वयोः ।। 54

1. ह्रादिनी (स्त्री) 2. वज्रः (पुं/न), 3. कुलिशः (पुं), 4. भिदुरं (न), 5. पविः (पुं), 6. शतकोटिः (पुं), 7. स्वरुः (पुं), 8. शम्बः (पुं), 9. दम्भोलिः (पुं), 10. अशनिः (पुं/स्त्री).

1. ஹ்ராதிநீ (பெ-ஈ) அலரல் என்ற சப்தம் உடையது.
2. வஜ்ர: (பு/ந-அ) தாக்கும் வல்லமையுள்ளது.
3. குலிசம் (ந-அ) கையில் ஏந்தப்படுவது.
4. பிதுரம் (ந-அ) பிளக்கும் வல்லமையுள்ளது.
5. பவி: (பு-இ) பகையை நீக்கிப் புனிதப்படுத்துவதால்.
6. சதகோடி: (பு-இ) பல கூர்களையுடையது.
7. ஸ்வரு: (பு-உ) வீசும்போது ஓசையுடன் கூடியது.
8. சம்ப: (பு-அ) திடமான பூண் உடையது.
9. தம்போலி: (பு-இ) (இந்திரனின்) கர்வத்தைப் பெறுக்குவது.
10. அசநி: (பு/பெ-இ) அதிரவைப்பது.

(இடிக்கும் இதுவே சொல்).

இந்திரனின் வார்தியின் பெயர்கள் : 2

व्योमयानं विमानोऽस्त्री . . . . ।

1. व्योमयानं (न), 2. विमानः (नम्) (पुं/न).

1. வ்யோமயாநம் (ந) ஆகாயத்தில் செல்லும் ஊர்தி.

2. விமாந:/(நம்) (பு/ந-அ) விரியும் தன்மையுடையது. பயணம் செய்வோர் எண்ணிக்கைக்குத் தக்கவாறு விரிந்து கொடுப்பது.

தேவருலகத்து முனிவர்கள்:

. . . . नारदाद्याः सुरर्षयः ।

1. नारदाद्याः (पुं)

1. நாரதர் (பு-அ) நாரதர் மனிதரின் அழுக்காறுகளைப் போக்குபவர். இவர் முதலானோர் தேவருலகத்து முனிவர்கள்.

இந்திரனின் தர்பார் :

स्यात् सुधर्मा देवसभा . . . . . ।

1. सुधर्मा (स्त्री-आ)

1. ஸுதர்மா (பெ-ஆ) இந்திரனின் தர்பாருக்கு ஸுதர்மா என்று . பெயர்.

தேவருலக பானம்

. . . . . . पीयूषममृतं सुधा ।। 55

1. पीयूषं (न), 2. अमृतं (न), 3. सुधा (स्त्री)

1. பீயூஷம் (ந-அ) உறிஞ்சிக் குடிக்கும் பானம்.

2. அம்ருதம் (ந-அ) மரணத்தைத் தவிர்ப்பது.

3. ஸுதா (பெ-ஆ) நன்கு நிலைக்கவைப்பது.

தேவருலக நதி: ஆகாசகங்கை - பெயர் : 4.

मन्दाकिनी वियद्गङ्गा स्वर्णदी सुरदीर्घिका ।

1. मन्दाकिनी (स्त्री), 2. वियद्गङ्गा(स्त्री), 3. स्वर्णदी (स्त्री),
4. सुरदीर्घिका (स्त्री).

1. மந்தாகினீ (பெ-ஈ) மெல்ல மெல்ல வளைந்து செல்வது.

2. வியத்கங்கா (பெ-ஆ) ஆகாசத்தில் உள்ள கங்கை.

3. ஸ்வர்ணதீ (பெ-ஈ) ஸ்வர்க்கத்தில் இருக்கும் நதி.

4. ஸுரதீர்கிகா (பெ-ஆ) தேவர்களின் ஓடை.

தேவர்கள் வாழும் மலையின் பெயர்கள் - 5

मेरुः सुमेरुर्हेमाद्री रत्नसानुः सुरालयः ।। 56

1. मेरुः (पुं), 2. सुमेरुः (पुं), 3. हेमाद्रिः (पुं),
4. रत्नसानुः (पुं), 5. सुरालयः (पुं).

1. மேரு: (பு-உ) அளவில் மிகவும் உயரமானது

2. ஸுமேரு: (பு-உ) மேருவிற்கு மாற்றுச் சொல்.

3. ஹேமாத்ரி: ((பு-இ) பொன்மலை.

4. ரத்னஸாநு: (பு-உ) ரத்னமயமான கொடிமுடிகளையுடையது.

5. ஸுராலய: (பு-அ) இங்கு தேவர்கள் வாழ்கின்றனர்.
சுவர்கத்தின் மரங்களின் பெயர்கள் : 5

சுவர்கத்தின் மரங்களின் பெயர்கள் : 5

पञ्चैते देवतरवो मन्दारः पारिजातकः ।
सन्तानः कल्पवृक्षश्च पुंसि वा हरिचन्दनम् ।। 57

1. मन्दारः (पुं), 2. पारिजातकः (पुं), 3. सन्तानः, (पुं),
4. कल्पवृक्षः (पुं), 5. हरिचन्दनम् (न/पुं)

1. மந்தார: (பு-அ) தேவர் உலகிலுள்ள ஒருவகை மரம்
2. பாரிஜாத: (பு-அ) மேற்படி
3. ஸந்தான: (பு-அ) மேற்படி
4. கல்பவ்ருக்ஷ: (பு-அ) மேற்படி
5. ஹரிசந்தனம் (பு/ந-அ) மேற்படி

இவற்றின் நிழலில் நின்று நினைத்ததைப் பெறலாம்.

பிரம்மதேவனின் மனதில் உண்டான முதல் குமாரர்கள்.

सनत्कुमारो वैधात्रः . . . . ।

1. सनत्कुमारः (पुं), 2. वैधात्रः (पुं)

1. ஸனத்குமார: (பு-அ) பிரம்மதேவனின் மனதில் உண்டான முதல் குமாரர்கள் நால்வர். ஸநகர், ஸநந்தனர், ஸநாதனர், ஸநத்குமாரர். என்றும் ஐந்து வயதுச் சிறுவர்கள். பேரறிஞர்கள். இவர்களில் ஸநத்குமாரர் 'வைத்ய ஸம்ஹிதை' எழுதியவர். பின்னால் தேவலோக வைத்யர்கள் குறிப்பிடப் போவதால் இங்கே அவருடைய பெயர் மட்டும் குறிப்பிடப் பட்டது.

2. வைதாத்ர: (பு-அ) பிரம்மதேவரின் குமாரர்.

. . . . स्वर्वैद्यावश्विनीसुतौ ।
नासत्यावश्विनौ दस्रावाश्विनेयौ च तावुभौ ।। 58

1. स्वर्वैद्यौ (पुं), 2. अश्विनीसुतौ (पुं), 3. नासत्यौ (पुं), 4. आश्विनौ (पुं), 5. दस्रौ (पुं), 6. आश्विनेयौ (पुं).

1. ஸ்வர்வைத்யௌ (பு-அ) இருமை. தேவருலக வைத்தியர் இருவர்.

2. அஸ்வினீஸுதௌ (பு-அ) இருமை. சூரியனின் மனைவியர் இருவர். அவர்கள் சாயா, சம்ஞா என்ற பெயரினர். இவர்களில் சம்ஞா என்பவள் குதிரைமுகம் கொண்டவள். இவளுக்கு இரட்டையர்களாகப் பிறந்தவர்கள். அச்வினீ தேவர்கள்.

3. நாஸத்யௌ (பு-அ) இருமை. பொய்யற்றவர்கள்.

4. ஆச்விநௌ (பு-ந்) இருமை. குதிரைமுகமுடைய சம்ஞாதேவியிடம் புறந்தவர்கள்.

5. தஸ்ரௌ (பு-அ) இருமை. ரோகங்களைக் (வியாதி களைக்) குறைத்து அழிப்பவர்கள்.

6. ஆஸ்விநேயௌ (பு-ஈ) இருமை. அஸ்விநீ நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள்.

தேவருலகத்து பொதுமகளிர் :

स्त्रियां बहुष्वप्सरसः स्वर्वेश्या ऊर्वशीमुखाः ।। 59

(घृताची मेनका रम्भा ऊर्वशी च तिलोत्तमा ।
सुकेशी मञ्जुघोषाद्याः कथ्यन्तेऽप्सरसो बुधैः ।।) 60

अप्सरसः (स्त्री), ऊर्वशीमुखाः ஊர்வசீ முதலானவர்கள்.

1. ऊर्वशी (स्त्री), 2. मेनका (स्त्री), 3. रम्भा (स्त्री), 4. घृताची (स्त्री), 5. तिलोत्तमा (स्त्री), 6. सुकेशी (स्त्री), 7. मञ्जुघोषा (स्त्री) முதலிய பெயர்களுடையவர்.

அப்ஸரஸ: (பெ-ஸ்) பன்மை. தேவருலகப் பொதுமகளிர். நீர்போல நுழைபவர்கள். அப்ஸரஸ்ஸுகள் பொதுவாகக் கூட்டமாகச் செல்பவர்கள். ஆகவே 'அப்ஸரஸ்' என்ற சொல் பன்மையிலே வரும்.

1. ஊர்வசீ (பெ-ஈ) சிறந்த வசீகரம் உடையவள். நாராயணர் என்ற ரிஷியின் தொடையில் அமர்ந்தும்கூட அவருடைய பிரம்மசரியத்தைக் கலைக்கமுடியாதவள்.
2. மேனகா (பெ-ஆ) மனத்திலேயே நினைத்துக்கொண்டு இருக்கும் அழகுடையவள்.
3. ரம்பா (பெ-ஆ) ரமிக்கும்படிச் செய்பவள்.
4. க்ருதாசீ (பெ-ஈ) அமிதத்தால் திருப்தி அடைந்தவள்.
5. திலோத்தமா (பெ-ஈ) அனைத்து அழகுப்பொருட்களில் இருந்தும் எள்ளளவு எடுத்து உருவாக்கப்பட்டவள்.
6. ஸுகேசீ (பெ-ஈ) அழகிய கூந்தல் உள்ளவள்.
7. மஞ்சுகோஷா (பெ-ஈ) இனிமை வாய்ந்த குரலுள்ளவள்.

தேவலோக இசைக்கலைஞர்கள் -- கந்தர்வர்கள்

हाहा हूहूश्चैवमाद्या गन्धर्वास्त्रिदिवौकसाम् ।। 61

1. हाहा (पुं), 2. हूहू (पुं), 3. विश्वावसुः (पुं), 4. चित्राङ्गतः (पुं), 5. चित्ररथः (पुं), 6, विलाङ्कः (पुं), 7. विलोचनः (पुं)

1. ஹாஹா (பு-ஆ) இவர்கள் இசைபாடும்போது ஹா . . ஹா என்று இசைகூட்டி ஒலி எழுப்புவார்.

2. ஹூஹூ (பு-ஊ) இவர்கள் இசைபாடும்போது ஹூ. .ஹூ என்று இசைகூட்டி ஒலி எழுப்புவார்.

3. விச்வாவஸு (பு-உ) என்று ஒருவர். இவர் இசைக்கு உலகமே ஈட்டுப் பொருள்.

4. சித்ராங்கத: (பு-அ) என்று ஒருவர். பல வர்ணங்கள் இணைந்த தோள்வளைகளை உடையவர்.

5. சித்ரரத: (பு-அ) விசித்திரமான தேர் உடையவர்.

6. விலாங்க: (பு-அ) இசையால் துதிப்பவர்.

7. விலோசன: (பு-அ) தனித்ததொரு பார்வையுடையவர்.

8. கந்தர்வ: (பு-அ) மேலே காணும் எழுவரும் கானத்தையே பாடும் தெய்வாம்சம் பொருந்தியவரில் ஒருவகையினர்.

இந்திரன் முதலான திசை அதிபர்கள் வரிசையில் கிழக்கு திசை அதிபன் இந்திரனையும்-அவனது பரிவாரங் களையும் இதுவரை கூறிய பிறகு தென்கிழக்கு திசை அதிபன் அக்நியின் பெயர்கள் கூறப்படுகின்றன.

அக்நியின் பெயர் : 34

अग्निर्वैश्वानरो वह्निः वीतिहोत्रो धनञ्जयः ।
कृपीटयोनिर्ज्वलनो जातवेदास्तनूनपात् ।। 62

बर्हिः शुष्मा कृष्णवर्त्मा शोचिष्केश उषर्बुधः ।
आश्रयाशो बृहद्भानुः कृशानुः पावकोऽनलः ।। 63

रोहिताश्वो वायुसखः शिखावानाशुशुक्षणिः ।
हिरण्यरेता हुतभुग् दहनो हव्यवाहनः ।। 64

सप्तार्चिदमुनाः शुक्रश्चित्रभानुर्विभावसुः ।
शुचिरप्पित्तम् . . . . ॥

1. अग्निः (पुं), 2. वैश्वानरः (पुं) 3. वह्निः, (पुं) 4. वीतिहोत्रः (पुं), 5. धनञ्जयः (पुं), 6. कृपीटयोनि (पुं), 7. ज्वलनः (पुं), 8. जातवेदा (पुं), 9. तनूनपात् (पुं), 10. बर्हिः (पुं), 11. शुष्मा (पुं), 12. कृष्णवर्त्मा (पुं), 13. शोचिष्केशः (पुं), 14. उषर्बुधः (पुं), 15. आश्रयाशः (पुं), 16. बृहद्भानुः (पुं), 17. कृशानुः (पुं), 18. पावकः (पुं), 19. अनलः (पुं), 20. रोहिताश्वः (पुं), 21. वायुसखः (पुं), 22. शिखावान् (पुं), 23. अशुशुक्षणिः (पुं), 24.हिरण्यरेताः (पुं), 25. हुतभुक् (पुं), 26. दहनः (पुं), 27. हव्यवाहनः (पुं), 28. सप्तार्चिः (पुं), 29. दमुनाः (पुं), 30 शुक्रः (पुं), 31. चित्रभानुः (पुं), 32. विभावसुः (पुं), 33. शुचिः (पुं), 34. अप्पित्तम् (पुं). இந்த முப்பத்துநாலும் அக்னியின் பேர்.

1. அக்நி: (பு-இ) மேல்நோக்கியோ, வளைந்தோ பெருகுகின்ற தீ நாக்குகளை உடையவர்.
2. வைச்வாநர: (பு-அ) விச்வாநரர் என்ற முநிவரின் புத்திரர்.
3. வஹ்நி: (பு-இ) யாகங்களில் தேவர்களுக்காகக் கொடுக்கப் படும் ஆகுதியைச் சுமந்து செல்பவர்.
4. வீதிஹோத்ர: (பு-அ) பலவிதமான உணவு வகைகளையும் ஆகுதியாக ஏற்றுக்கொள்பவன். அச்வமேத யாகத்தில் குதிரைகளை ஆகுதியாக ஏற்பவர்.
5. தனஞ்ஜய: (பு-அ) செல்வத்தை வெல்பவர்.
6. க்ருபீடயோநி: (பு-இ) தண்ணீருக்கு உற்பத்தி இடம். பிரம்மனின் படைப்பு வரிசையில் ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து

தண்ணீரும் உண்டாயின என்பது வேதமரபு. 2. அரணிக் கட்டையைக் கடைந்து உண்டாக்கப்படுபவன். அரணி எனில் வன்னிமரம்.

7. ஜ்வலந: (பு-அ) பிழம்புகள் உடையவர்.

8. ஜாதவேதா: (பு-ஸ்) உணர்வைத் தருபவர்.

9. தநூநபாத் (பு-த்) தனக்கு உடலான விறகைக் காப்பாற்றாதவர்.

10. பர்ஹி: (பு-ஷ) தூப்புல்களால் -- தர்பங்களால் வளர்கின்றவர்.

11. சுஷ்மா (பு-ந்) வற்றச் செய்பவன்-பர்ஹி:, ; சுஷ்மா-என்ற கூட்டுச் சொல் எனினும் ஒரேபதமாகவும் கொள்ளலாம். தூப்புல்களைப் பற்றிப் பொசுக்குபவர்.

12. க்ருஷ்ணவர்த்மா (பு-ந்) அது சென்ற வழியெல்லாம் கருகிவிடும்.

13. சோசிஷ்கேச: (பு-அ) தீப்பிழம்புகளையே தலைமுடியாகக் கொண்டவர்.

14. உஷர்புத: (பு-அ) காலையில் யாககுண்டத்தில் வெளிப்படுபவர். முனிவர்கள் ஆகுதி கொடுப்பதால்.

15. ஆச்ரயாச: (பு-அ) தனது ஆதாரத்தையே உண்டு அழிப்பவர்.

16. ப்ருஹத்பாநு: (பு-உ) பெரிய கதிர்களை உடையவர்.

17. க்ருசாநு: (பு-உ) எரிந்து எரிந்து மெலிந்துவிடுபவர். சிறு பொறியிலிருந்து வளர்பவர்.

18. பாவக: (பு-அ) தூய்மையளிப்பவர்.

19. அநல: (பு-அ) போதுமென்று அமையாதவர். (2) தீயில் இட்டவை ஏற்கப்படாமல் மிச்சப்பட்டன என்பது கிடையாது.

20. ரோஹிதாச்வ: (பு-அ) அக்நி என்ற தேவதைக்கு வாஹனம் சிவப்புநிறமுள்ள குதிரை. லோஹிதாச்வ: என்ற மாற்றுச் சொல்லும் உண்டு. மானும் இவருக்கு வாஹனம்.

21. வாயுஸக: (பு-அ) காற்றின் துணைகொண்டவர்.

22. சிகாவான் (பு-ந்) தீப்பிழம்புகளைத் தனது குடுமியாகக் கொண்டவர்.

23. ஆசுசுக்ஷணி: (பு-இ) விரைவாகவே வற்றச் செய்வதில் விருப்பமுள்ளவர்.

24. ஹிரண்யரேதா: (பு-இ) தங்கத்தை உருக்கி, அதைப் பிழம்பாக வெளிப்படுத்துபவர்.

25. ஹுதபுக் (பு-த்) ஆகுதியை உண்பவர்.

26. தஹந: (பு-அ) எரிப்பவர்.

27. ஹவியவாஹந: (பு-அ) 'அவியை'த் தாங்கிச் சென்று தேவர்களுக்குச் சேர்ப்பவர்.

28. சப்தார்சிஷ் (பு-ஷ்) ஏழுவகையான கதிர்கள் உடையது. (1) கருப்பு நிறம், (2) மென்மையற்றது, (3) மனதைக் காட்டிலும் வேகமாகப் பரவக்கூடியது, (4) நல்ல சிவப்பு நிறமுடையது. (5) புகைவண்ணமுடையது, (6) பொறி களாகப் பறப்பது, (7) எங்கும் பரவுவது.

29. தமுநா: (பு-அ) வாட்டமுறச் செய்பவர். தமூநா என்ற மாற்றுச் சொல்லும் உண்டு.

30. சுக்ர: (பு-அ) (1) துயர் தருபவர், (2) ஒளிபெருக்குபவர்.

31. சித்ரபாநு: (பு-உ) பல நிறமுடைய கதிர்களை உடையவர்.

32. விபாவஸு: (பு-உ) காந்தியை – ஒளியைத் தனது செல்வமாக உடையவர்.

33. சுசி: (பு-இ) 1) துக்கமடையச்செய்பவர், (2) தூய்மையானவர்.

34. அப்பித்தம் (ந-அ) நீரைச் சுரண்டச் செய்பவர்.

இந்த முப்பத்துநான்கும் அக்நியின் பெயர்கள்.

அக்நியின் வேறுவகை

. . . . . . और्वस्तु बाडवो बडवानलः ।। 65

1. और्वः (पुं), 2. बाडवः (पुं), 3. बडवानलः (पुं).

1. ஔர்வ: (பு-அ) 'உரிவர்' என்ற முனிவர் கடலின் நடுவில் விளைவித்த நெருப்பு. கடல் நீர் பெருகப்பெருக அந்த அளவுக்குச் சுண்டவைக்கும் நெருப்பு.

2, 3. பாடவ:, படவானல: (பு-அ) படபா என்றால் பெண்குதிரை. அந்தப் பெண் குதிரையின் முகத்தில் இந்த அக்நி இருப்பதால், கோபமுடனிருந்த சிவபெருமானிடம் அவரது கோபத்திற்கு அஞ்சிய தேவர்கள், 'ஸ்வாமீ! தாங்கள் சாந்தமடையவேண்டும்' என்றுவேண்ட, தன் கோபத்தை குதிரை உருவான நெருப்பாக்கி 'நீ கடலுள் சென்று அதிலுள்ள தண்ணீரையே உணவாகக் கொள்' என்று அருள்புரிந்தார் (காளிகா புராணம் அத்யா - 41)

அக்நி கொழுந்தின் பெயர்கள் :

वह्नेर्द्वयोज्वालकीलावर्चिर्हेतिः शिखा स्त्रियाम् ।

1. ज्वालः - ज्वाला (पुं-अ; स्त्रि-आ),

2. कीलः - कीला (पुं-अ; स्त्री-आ),

3. अर्चिः (न), 4. हेतिः (पुं), 5. शिखा (स्त्री).

1. ஜ்வால: (பு-அ) நெருப்பின் கொழுந்து.

ஜ்வாலா (பெ-ஆ) மேற்படி

2. கீல: (பு-அ) பறக்கின்ற சிறிய விட்டில்பூச்சி போன்றவற்றை நெருங்கவிடாமல் தடுப்பது.

கீலா (பெ-ஆ) மேற்படி

3. அர்ச்சி: (ந-ஸ்) வணங்கத்தக்கது.

4. ஹேதி: (பெ-இ) நெருங்குகின்றவற்றைத் தீண்டுவது.

5. சிகா (பெ-ஆ) நெருப்பின் குடுமி.

தீப்பொறியின் பெயர்கள் : 2

त्रिषु स्फुलिङ्गोऽग्निकणः . . . . ।

1. स्फुलिङ्गः (त्रि), 2.अग्निकणः (पुं).

1. ஸ்புலிங்க:, ஸ்புலிங்கா, ஸ்புலிங்கம் (மு-அ) தீப்பொறி.

2. அக்னிகண: (பு-அ) அக்னியின் துளி.

அக்னியின் சூட்டின் பெயர் : 2

. . . . सन्तापः संज्वरः समौ । 66

1. सन्तापः (पुं-अ), 2. संज्वरः (पुं-अ)

1. ஸந்தாப: (பு-அ) உடலை மற்றும் அருகிலுள்ள பொருட்களை மிகவும் தபிக்கும்படிச் செய்வது.
2. ஸம்ஜ்வர: (பு-அ) உடலை மிகவும் பீடிப்பது.

தீவட்டியின் பெயர் : 1

(उल्का स्यान्निगर्ता ज्वाला . . . .

1. उल्का (स्त्री)

1. உல்கா (பெ-ஆ) தீவட்டி.

விபூதியின் பெயர் : 4

. . . . . भूतिर्भसितभस्मनी ।

क्षारो रक्षा च . . . .

1. भूतिः (स्त्री), 2. भसितं (न), 3. भस्म (न) 4. क्षारः (पुं).

1. பூதி: (பெ-இ) நெருப்பணைந்த சாம்பல் -விபூதி.

2. பஸிதம் (ந-அ) மேற்படி

3. பஸ்ம (ந-அ) மேற்படி

4. க்ஷார: (பு-அ) கரகரப்புடையது.

காட்டுத்தீயின் பெயர் : 2

. . . . दावस्तु दवो वनहुताशनः ।। 67

1. दावः (पुं), 2. दवः (पुं)

1. தாவ: (பு-அ) காட்டுத்தீ.

2. தவ: (பு-அ) காட்டுத்தீ.

அடுத்து தென்திசை அதிபன் யமனின் பெயர் : 14

धर्मराजः पितृपतिः समवर्ती परेतराट् ।
कृतान्तो यमुनाभ्राता शमनो यमराट् यमः ।। 68
कालो दण्डधरः श्राद्धदेवो वैवस्वतोऽन्तकः ।

1. धर्मराजः (पुं), 2. पितृपतिः (पुं), 3. समवर्ती (पुं), 4. परेतराट् (पुं), 5. कृतान्तः (पुं), 6. यमुनाभ्राता (पुं), 7. शमनः (पुं), 8. यमराट् (पुं), 9. यमः (पुं), 10. कालः (पुं), 11. दण्डधरः (पुं), 12. श्राद्धदेवः (पुं), 13 वैवस्वतः (पुं), 14.अन्तकः (पुं).

1. தர்மராஜ: (பு-அ) அறங்களை அமுல் செய்கின்ற அரசன்.

2. பித்ருபதி: (பு-இ) பித்ருக்களாக விளங்குகின்ற அனைத்து மக்களின் முன்னோர்களின் தலைவன்.

3. ஸமவர்த்தீ (ந-ஈ) மேலோர்- கீழோர் என்ற பாகுபாடின்றி

மரணத்தினால் உடல் இழந்த ஜீவர்களை நடத்துபவன்.

4. பரேதராட் (பு-இ) இறந்தவர்களின் காப்பாளர். இறந்தவர் களின் புண்ய-பாபங்களைத் தலைவிதியாக மாற்றுபவன்.

5. க்ருதாந்த: (பு-அ) உயிர்களுக்கு முடிவை நிர்ணயிப்பவன்.

6. யமுநா ப்ராதா (பு-ர்ரு) சூரியனின் புதல்வன் சூரியஸன். அவன் புதல்வியான யமுநாவின் சகோதரன்.

7. சமந: (பு-அ) மரணவேதனையை அளிப்பவன்.

8. யமராட் (பு-ஜ) தனது ஆளுமையில் கோபம், கொடுமை களைக் காட்டாமல் தண்டனையை நிறைவேற்றுபவன்.

9. யம: (பு-அ) (1) ஜீவர்களின் புண்ணிய-பாபங்களுக்கேற்ப இன்ப-துன்பங்களை முறைப்படுத்துபவன்

(2) சூரியனுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒருவன். மற்றவள் யமுனை.

10. கால: (பு-அ) ஆயுள் கணக்கன்.

11. தண்டதர: (பு-அ) ' காலதண்டம் ' என்ற பெயருள்ள தண்டத்தை (கோலை)க் கையில் கொண்டவன்.

12. ச்ராத்ததேவ: (பு-அ) முன்னோர்களின் ஈமச்சடங்குகளில் ஆகுதி பெறுகின்ற தேவதை.

13. வைவஸ்வத: (பு-அ) விவஸ்வான் என்ற சூரியனின் புத்திரன்.

14. அந்தக: (பு-அ) பிறப்பை முடிப்பவன்.

இனி தென்மேற்குமூலையின் தேவதையான நிருதியின் பெயர் : 15

राक्षसः कौणपः क्रव्यात् क्रव्यादोऽस्रपाशरः ।। 69

रात्रिंचरो रात्रिचरः कर्बुरो निकषात्मजः ।
यातुधानः पुण्यजनो नैर्ऋतो यातुरक्षसी ।। 70

1. राक्षसः (पुं), 2. कौणपः (पुं), 3. क्रव्यात् (पुं), 4. क्रव्यादः(पुं) 5. अस्रपः (पुं) 6. आशरः (पुं) 7. रात्रिंचरः (पुं), 8. रात्रिचरः (पुं), 9. कर्बुरः (पुं), 10. निकषात्मजः (पुं), 11. यातुधानः (पुं), 12. पुण्यजनः (पुं), 13. नैऋतः (पुं), 14. यातु (पुं), 15. रक्षः (पुं).

1. ராக்ஷஸ: (பு-அ) தெய்வாம்சம் பொருந்திய ஆனால் கொடியவர்களான ஒரு கணத்தவர். பிர்ம்மதேவன் ஒரு நீர் நிலையைப் படைத்தார். அதைக் காக்குமாறு யக்ஷர்களை ஏவினார். யக்ஷர்கள் அதைக் காத்து வந்தனர். அவர்களுக்குப் பசி வந்தமையால் ஒரு பகுதியினர் (பசித்தோர்) நீர்நிலையிலிருந்த மீன்களைப் புசித்தனர். மற்றொரு பிரிவினர் பசித்தபோதும் மீன் உண்ணாமல் காவல் காத்தனர். இதனால் மீன் உண்டவர்கள் ஒரு பிரிவினராகவும், மீன் உண்ணாமல் இருந்தவர்கள் ஒரு பிரிவினராகவும் தங்களுக்கு உள்ளேயே பிரிந்தனர். மீன் உண்டவர்கள் யக்ஷர் இனமாகவும், மீன் உண்ணாது காவல் புரிந்தவர்கள் ராக்ஷஸ (காத்தலால்) இனமாகவும் பிரிந்துவிட்டனர். ஆதலால் காத்தல் தொழிலைச் செய்தமையால் ராக்ஷஸர் எனப்பட்டனர் என்பது ஒரு செய்தி.
2. கௌணப: (பு-அ) 1. சவத்தை உண்பவர், 2. கோணப: என்று மாற்றுச் சொல். தென்மேற்கு மூலைக்கு அதிதேவதை.
3. க்ரவ்யாத: (பு-த்) மாமிசம் உண்பவர்.
4. க்ரவ்யாத: (பு-அ) மாமிசம் உண்பவர்.
5. அஸ்ரப: (பு-அ) பினத்தின் ரத்தம் குடிப்பவர். "அச்ரப:" என்று மாற்றுச்சொல்.
6. ஆசர: (பு-அ) கொடுமை இழைப்பவர்.
7. ராத்ரிம்சர: (பு-அ) இரவில் சஞ்சரிப்பவர்.
8. ராத்ரிசர: (பு-அ) இரவில் சஞ்சரிப்பவர்.

9. கர்புர: (பு-அ) இசையாத பல நிறத்தவர்.

10. நிகஷாத்மஜ: (பு-அ) நிகஷை என்ற அரக்கியின் மகன்.

11. யாதுதாந: (பு-அ) ஒழிக என்றே கூச்சல் கொள்கை உடையவர்.

12. புண்யஜந: (பு-அ) புண்யவான் என்று எதிர்மறையாக அழைக்கப்படுபவர்.

13. நைர்ருத: (பு-அ) நிர்ருதி என்ற திசை தேவியின் மகன்.

14. யாது (ந-உ) துன்பமளிப்பவன்.

15. ரக்ஷஸ் (ந-ஸ்) முன்கூறப்பட்ட பொருளே.

மேற்கு திசை அதிபன் (வருணனின்) பெயர் : 5

प्रचेता वरुणः पाशी यादसांपतिरप्पतिः ।। 71

1. प्रचेताः (पुं), 2. वरुणः (पुं), 3. पाशी (पुं), 4. यादसांपतिः (पुं), 5. अप्पतिः (पुं).

1. ப்ரசேதா: (பு-ஸ்) நல்ல மனதுள்ளவள்.
2. வருண: (பு-அ) நீரில் தேவதையாக அழைக்கப்படுபவர்.
3. பாசீ (பு-ந்) கயிற்றை ஆயுதமாக ஏந்தியவர்.
4. யாதஸாமபதி:(பு-இ) நீரில்வாழும் உயிரினங்களின் அரசன்.
5. அப்பதி: (பு-இ) நீரின் அதிதேவதை.

வடமேற்கு மூலையின் அதிபரின் (வாயு) பெயர் : 20

श्वसनः स्पर्शनो वायुर्मातरिश्वा सदागतिः ।
पृषदश्वो गन्धवहो गन्धवाहानिलाशुगाः ।। 72

समीरमारुतमरुज्जगत्प्राणसमीरणाः ।
नभस्वद्वातपवन पवमान प्रभञ्जनाः ।। 73

1. श्वसनः (पुं), 2. स्पर्शनः (पुं), 3. वायुः (पुं),
4. मातरिश्वान् (पुं), 5. सदागतिः (पुं), 6. पृषदश्वः (पुं),
7. गन्धवहः (पुं), 8. गन्धवाहः (पुं), 9. अनिलः (पुं),
10. अशुगाः (पुं), 11. समीरः (पुं), 12. मारुतः (पुं),
13. मरुत् (पुं), 14. जगत्प्राणः (पुं), 15. समीरणः (पुं),
16. नभस्वान् (पुं), 17. वातः (पुं), 18. पवनः (पुं),
19. पवमानः (पुं), 20. प्रभञ्जनाः (पुं).

1. ச்வஸந: (பு-அ) மூச்சுக்காற்று.

2. ஸ்பர்சந: (பு-அ) தீண்டுபவன். நாம் அவனைத் தீண்ட முடியாது. அது நம்மைத் தீண்டுகிறது. அதனால் இச்சொல்.

3. வாயு: (பு-உ) வீசுகின்றவன்.

4. மாதரிச்வா (பு-ந்) திதி என்ற தாயின் வயிற்றில் சிதறியவன். (49. துகள்களாக).

5. ஸதாகதி: (பு-இ) ஓய்வின்றி எப்போதும் இலங்குபவன்.

6. ப்ருஷதச்வ: (பு-அ) 1. கலைமானை வாஹனமாக உடைய தேவன். 2. நீர்த்துளிகளில் ஊடுருவிப் பரவுபவன்.

7. கந்தவஹ: (பு-அ) மணத்தைச் சுமந்து செல்பவர்.

8. கந்தவாஹ: (பு-அ) மணத்தைச் சுமந்து செல்பவர்.

9. அநில: (பு-அ) பிராணிகளின் உயிர்களில் உறைபவன்.

10. ஆசுக: (பு-அ) வேகமாக வீசுபவன்.

11. ஸமீர: (பு-அ) (லேசானவற்றை) ஈர்த்து வீசி எறிபவன்.

12. மாருத: (பு-அ) மூச்சு அசையாமல் திணரினால் மரணம் ஏற்படும். அத்தகைய திறன் உள்ளவன்.

13. மருத: (பு-அ) மேற்படி

14. ஜகத்பிராண: (பு-அ) (1) எங்கும் பிராணிகளின் மூச்சாக உயிராக நிற்பவன். (2) உலகெங்கும் சஞ்சரித்துக் கொண்டே இருக்கின்ற காரணத்தால் உலக உயிர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இதன் காரணமாக உலகிற்கு பிராணனாக இருப்பவன் என்று பெயர்.

15. ஸமீரண: (பு-அ) (லேசானவற்றை) ஈர்த்து வீசி எறிபவன்.

16. நபஸ்வத் (பு-த்) காற்று நுழைகின்ற நுண்ணிய வெற்றிடத் திற்கு நப: என்று பெயர். அதையும் ஆதாரமாக, புகலிடமாக உடையது.

17. வாத: (பு-அ) வீசுகின்ற வல்லமை படைத்தது.

18. பவந: (பு-அ) பறப்பதற்கு உறுதுணையாவது.

19. பவமாந (பு-அ) தூய்மைப்படுத்துபவன்.

20. ப்ரபஞ்ஜன: (பு-அ) எதிர்ப்பட்டவைகளை, மரக்கிளை போல் ஒடிப்பவன்.

காற்றின் வகைகள்.

உடலில் ஊடுறுவும் காற்றுவகை : 5

प्राणोऽपानः समानश्चोदानवयानौ च वायवः ।
हृदि प्राणो गुदेऽपानः समानो नाभिमण्डले ।। 74

उदानः कण्ठदेशे स्याद् व्यानः सर्वशरीरगः ।। 75

शरीरस्था इमे, ...

1. प्राणः (पुं), 2. अपानः (पुं), 3. समानः (पुं), 4. उदानः (पुं), 5. व्यानः (पुं)

1. ப்ராண: (பு-அ) இது கிளம்புகின்ற இடம் இதயம். இக்காற்று மேல்நோக்கிப் போவது. இதுவே உயிர்.

2. அபாந: (பு-அ) இது புட்டத்திலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் காற்று.

3. ஸமாந: (பு-அ) இது தொப்புளிலிருந்து கிளம்பி உள்ளே பருவுவது.

4. உதாந: (பு-அ) தொண்டையில் உண்டாகி ஓசைக்கு உதவுவது. தொப்புளில் உண்டாகின்ற ஸமானவாயு பரவலாகப் பரவும்போது மேல்நோக்கி உந்தப்பட்டு தொண்டையில் குரலாக ஓசையுடன் வெளிப்படுகிறது.

5. வ்யாந: (பு-அ) இது உடலெங்கும் வியாபித்துள்ளது.

காற்றின் வேகத்திற்குப் பெயர் : 5

. . . . रंहस्तरसी तु रयः स्यदः ।

जवो . . . .

1. रंहस् (न), 2. तरस् (न), 3. रयः (पुं), 4. स्यदः (पुं) 5. जवः (पुं).

1. ரம்ஹஸ் (ந-ஸ்) காற்றின் உந்துதல் திறன்.

2. தரஸ் (ந-ஸ்) காற்றின் தாண்டுகின்ற திறன்.

3. ரய: (பு-அ) காற்றின் இழுக்கின்ற திறன்.

4. ஸ்யத: (பு-அ) காற்றின் மிதக்கும் சக்தி.

5. ஜவ: (பு-அ) இணைந்து இழுக்கும் திறன்.

விரைவைக்குறிக்கும் பொதுச்சொல் :

(अथ शीघ्रं त्वरितं लघु क्षिप्रमरंद्रुतम् ।। 76

सत्वरं चपलं तूर्णमविलम्बितमाशु च ।)

1. शीघ्रं (न), 2. त्वरितं (न), 3. लघु (न), 4. क्षिप्रं (न), 5. अरं (न), 6. द्रुतं (न), 7. सत्वरं (न), 8.चपलं (न), 9. तूर्णं (न), 10. अविलम्बितं (न), 11. आशु (न).

1. சீக்ரம் (ந-அ) விரைவு.
2. த்வரித (ந-அ) விரைவு.
3. லகு (ந-அ) லேசானது.
4. க்ஷிப்ரம் (ந-அ) விரைவு
5. அரம் (ந-அ) விரைவு.
6. த்ருதம் (ந-அ) விரைவாக ஓடுவது.
7. ஸத்வரம் (ந-அ) விசையோடு கூடிய வேகம்.
8. சபலம் (ந-அ) மெதுவாகவும், வேகமாகவும், சுழன்றும், திரும்பியும் செல்வது.
9. தூர்ணம் (ந-அ) அதிவிரைவு.
10. அவிலம்பிதம் (ந-அ) தாமதமின்றி - சீரான வேகம்.
11. ஆசு (ந-உ) சீரான விரைவு.

ஓயாமல் இயங்குவது பற்றிய சொல் : 9

सततानारताश्रान्तसंततावरतानिशम् ।
नित्यानवरताजस्रमपि . . . . . .

1. सततं (न-अ), 2. अनारतं (न-अ), 3. अश्रान्तं (न-अ), 4.सन्ततं (न-अ), 5. अविरतं (न-अ), 6. अनिशं (न-अ), 7. नित्यं (न-अ), 8. अनवरतं (न-अ), 9. अजस्रं (न-अ).

1. ஸததம் (ந-அ) ஓயாமல்.
2. அநாரதம் (ந-அ) முடிவில்லாமல்.
3. அச்ராந்தம் (ந-அ) ஓய்வில்லாமல்

4. ஸந்ததம் (ந-அ) எப்போதும்

5. அவிரதம் (ந-அ) ஓயாமல்.

6. அநிசம் (ந-அ) இரவு பகலின்றி.

7. நித்யம் (ந-அ) எப்போதும்.

8. அநவரதம் (ந-அ) ஓயாமல்.

9. அஜஸ்ரம் (ந-அ) இடைவிடாமல்.

மிகை என்பதற்கு - 14.

. . . . अथ अतिशयो भरः ।। 78

अतिवेलभृशात्यर्थातिमात्रोद्गढनिर्भरम् ।
तीव्रैकान्तनितान्तानि गाढबाढदृढानि च ।। 79

क्लीबे शीघ्राद्यसत्त्वे स्यात् त्रिष्वेषां सत्त्वगामि यत् ।

1. अतिशयः (पुं), 2. भरः (पुं), 3. अतिवेलं (न), 4. भृशं (न), 5. अत्यर्थं (न), 6. अतिमात्रं (न), 7. उद्गाढं (न), 8. निर्भरं (न), 9. तीव्रं (न), 10. एकान्तं (न), 11. नितान्तं (न), 12. गाढं (न), 13. बाढं (न), 14. दृढं (न).

1. அதிசய: (பு-அ) எல்லாவற்றிற்கும் மேன்மையானது.

2. பர: (பு-அ) திண்மையுடையது.

3. அதிவேலம் (ந-அ) எல்லை கடந்த.

4. ப்ருசம் (ந-அ) மிகவும்.

5. அத்யர்த்தம் (ந-அ) தேவைக்கதிகமான

6. அதிமாத்ரம் (ந-அ) அளவிற்கதிகமான.

7. உத்காடம் (ந-அ) நெருக்கடியான.

8. நிர்பரம் (ந-அ) சளைக்காத

9. தீவ்ரம் (ந-அ) தீவிரமான.

10. ஏகாந்தம் (ந-அ) ஒரே முனைப்புடன்.

11. நிதாந்தம் (ந-அ) பெருமுயற்சியுடன்.

12. காடம் (ந-அ) முழுமூச்சுடன்.

13. பாடம் (ந-அ) முழு ஆதரவோடு

14. த்ருடம் (ந-அ) உறுதிப்பாட்டோடு.

இவை யாவும் வினைச்சொல்லுடன் இணைபவை.

அதிவேல என்பது முதல் பனிரண்டு சொற்கள்.

क्लीबे शीघ्राद्यसत्त्वे स्यात् त्रिष्वेषां सत्त्वगामि यत् । 80

சீக்ரம் என்ற சொல்முதல் (அதிசயோபர: என்ற இரண்டு சொற்கள் தவிர) த்ருட என்ற சொல் வரை வினைச்சொல்லுடன் சேரும்போது நபும்ஸகலிங்கங்கள். **शीघ्रं गच्छति, सततं भुंक्ते** வேகமாகச் செல்கிறான். ஓயாமல் சாப்பிடுகிறான்.

ஆனால், அவை பொருள்களோடு சேரும்போது பொருள்களுக்குரிய சொற்களின் லிங்கத்திற்கு ஏற்றவாறு மூன்று லிங்கங்களிலும் வரும்.

शीघ्रा जरा சீக்கிரம் வந்த கிழத்தனம்.

शीघ्रो मृत्युः சீக்ரமே நேர்ந்த மரணம்.

शीघ्रं वयः அவசரமான வயது முதிர்ச்சி.

இனி வடதிசை அதிபர் குபேரனின் பெயர்கள் : 17

कुबेरोत्र्यम्बकसखो यक्षराड् गुह्यकेश्वरः ।
मनुष्यधर्मा धनदो राजराजो धनाधिपः ।। 81

किन्नरेशो वैश्रवणः पौलस्त्यो नरवाहनः ।
यक्षैकपिङ्गैलविल श्रीद पुण्यजनेश्वराः ।। 82

1. कुबेरः (पुं), 2. त्रयम्बकसखः (पुं), 3. यक्षराजः (पुं), 4. गुह्यकेश्वरः (पुं), 5. मनुष्यधर्मा (न), 6. धनदः (पुं), 7 राजराजः (पुं), 8. धनाधिपः (पुं), 9. किन्नरेशः (पुं), 10. वैश्रवणः (पुं), 11. पौलस्त्यः (पुं), 12. नरवाहनः (पुं), 13. यक्षः (पुं), 14. एकपिङ्गः (पुं), 15. ऐलबिलः (पुं), 16. श्रीदः (पुं), 17. पुण्यजनेश्वरः (पुं).

1. குபேர: (பு-அ) முழுவளர்ச்சியற்ற உடல் உடையவர்.
2. த்ரயம்பகஸக: (பு-அ) சிவபெருமானின் நண்பர்.
3. யக்ஷராட் (பு-ஜ) யக்ஷர்களின் தலைவர்.
4. குஹ்யகேச்வர: (பு-அ) செல்வத்தைக் காப்பவர்களின் தலைவர்.
5. மனுஷ்யதர்மா (ந-ந்) தேவராயினும் தைவிகத்தன்மை இல்லாது மனித இயல்பே உடையவர்.
6. தநத: (பு-அ) செல்வத்தைக் கொடுப்பவர்.
7. ராஜராஜ: (பு-அ) யக்ஷர்களுக்கு அரசர்.
8. தநாதிப: (பு-அ) செல்வத்திற்கு அதிபதி.
9. கிந்நரேச: (பு-அ) கிந்நரர்களுக்கு அரசர்.
10. வைச்ரவண: (பு-அ) விச்ரவஸ் என்ற முனிவரின் குமாரர்.
11. பௌலத்ஸ்ய: (பு-அ) புலஸ்தியரின் வம்சத்தில் பிறந்தவர்.
12. நரவாஹந: (பு-அ) மனிதனைத் தனது வாஹனமாகக் கொண்டவர்.
13. யக்ஷ: (பு-அ) (1) அனைவராலும் பூஜிக்கப்படுகின்றவர். (2) யக்ஷ ஜாதியில் பிறந்தவர் என்பதாலும் குபேரனுக்கு யக்ஷன் என்ற பெயர்.

14. ஏகபிங்க: (பு-அ) பார்வதிதேவியை முறைமீறிய மனத்தோடு பார்த்ததால் ஒரு கண் புளித்தகண் (ஒளி இழந்ததாக) ஆயிற்று.

15. ஐலபில: (பு-அ) இலபிலா என்ற பெண்ணின் பிள்ளை. ஐடபிட: என்று மாற்றுச் சொல்லும் உண்டு.

16. ஸ்ரீத: (பு-அ) செல்வத்தைக் கொடுப்பவர்.

17. புண்யஜநேச்வர: (பு-அ) புண்ய ஜனங்கள் என்ற யக்ஷர்களின் தலைவர்.

குபேரனைச் சார்ந்த சொற்கள் :

अस्योद्यानं चैत्ररथं . . . .

1. चैत्ररथं (न)

1. சைத்ரரதம் (ந-அ) குபேரனின் நந்தவனத்தின் பெயர்.

. . . . पुत्रस्तु नलकूबरः ।

1. नलकूबरः (पुं)

1. நளகூப்ர: (பு-அ) அவன் குமாரன் பெயர் நளகூபரன்.

कैलासः स्थानम् . . . .

1. कैलासः (पुं)

1. கைலாஸ: (பு-அ) அவன் இருப்பிடம் கைலாஸம்.

. . . . अलका पूः. . .

1. अलकाः (पुं)

1. அலகா: (பெ-ஆ) அவனுடைய நகரம் அலகாபுரீ.

. . . . . विमानं तु पुष्पकम् ।

1. पुष्पकम् (न)

1. புஷ்பகம் (ந-அ) அவனுடைய விமானம் புஷ்பகம்.

குபேர நகர பிரஜைகள்

கிந்நரர் என்ற தேவாம்சம் பொருந்தியவர் பெயர்கள்:

स्यात् किन्नरः किंपुरुषस्तुरंगवदनो मयुः ।

1. किन्नरः (पुं), 2. किंपुरुषः (पुं), 3. तुरंगवदनः (पुं), 4. मयुः (पुं).

1. கிந்நர: (பு-அ) மனிதன் போன்ற வடிவுடையவர்.

2. கிம்புருஷ: (பு-அ) மேற்படி

3. துரங்கவதந: (பு-அ) குதிரை போன்ற முகம் உடையவர்.

4. மயு: (பு-அ) பாய்ந்து செல்பவர்.

குபேரனின் செல்வக்குவியல்களின் பெயர் :

. . . .निधिर्ना शेवधिः

1. निधिः (पुं), 2. शेवधिः (पुं).

1. நிதி: (பு-இ) நிதி.

2. சேவதி: (பு-இ) செல்வக்கிடங்கு.

குபேரனுடைய நிதிகள் ஒன்பது வகைப்படும்.

. . . . भेदाः पद्मशङ्खादयो निधेः ।। 84

महापद्मश्च पद्मश्च शङ्खो मकरकच्छपौ ।
मुकुन्दकुन्दनीलाश्च चर्चाश्च निधयो नव ।। 85

।। इति श्रीमदमरसिंहकृते नामलिङ्गानुशासने स्वर्गवर्गः ।।

शङ्खादयः भेदाः சங்கம் முதலிய பிரிவுகள் வருமாறு :

1. शङ्खः (पुं-अ) சங்க: (பு-அ) சங்கநிதி
2. पद्मः (पुं-अ) பத்ம: (பு-அ) பத்மநிதி
3 महापद्मः (पुं-अ) மஹாபத்ம: (பு-அ) மஹாபத்மநிதி
4. मकरः (पुं-अ) மகர: (பு-அ) மகரநிதி
5. कच्छपः (पुं-अ) கச்சப: (பு-அ) கச்சபநிதி
6. मुकुन्दः (पुं-अ) முகுந்த: (பு-அ) முகுந்தநிதி
7. कुन्दः (पुं-अ) குந்த: (பு-அ) குந்தநிதி
8. नीलः (पुं-अ) நீல: (பு-அ) நீலநிதி
9. चर्चा (पुं-अ) சர்ச்சா (பு-அ) கர்வநிதி

சுவர்கவர்கம் முற்றிற்று.

2. अथ व्योमवर्गः

ஆகாயத்தின் பெயர் : 14

द्योदिवौ द्वे स्त्रियामभ्रं व्योम पुष्करमम्बरम् ।
नभोऽन्तरिक्षं गगनमनन्तं सुरवर्त्म खम् ।। 86

वियद् विष्णुपदं . . . .

1. द्यौ (स्त्री), 2. दिवौ (स्त्री), 3. अभ्रं (न), 4. व्योम (न), 5. पुष्करं (न), 6. अम्बरं (न), 7. नभः (न), 8. अन्तरिक्षं (न), 9. गगनं (न) 10. अनन्तं (न) 11. सुरवर्त्म (न) 12.खम् (न), 13. वियत् (न), 14. विष्णुपदं (न).

1. த்யோ (பெ-ஓ) இதன் விளக்கம் முதல் வர்கம் சுலோக எண் 6ல் காண்க.
2. திவெள (பெ-வ) மேற்படி (1-1-6)
3. அப்ரம் (ந-அ) எதையும் தாங்குவது.
4. வ்யோம (ந-ந்) எங்கும் நிறைந்துள்ளது.
5. புஷ்கரம் (ந-அ) நிரப்புவது (திறந்தவெளியை).
6. அம்பரம் (ந-அ) ஓசையை ஏற்பது.
7. நப: (ந-ஸ்) ஒலியை நெருக்குவது.
8. அந்தரிக்ஷம் (ந-அ) சுவர்க்கத்திற்கும் பூமிக்குமிடையே காணப்படுவது.
9. ககநம் (ந-அ) நகருவதற்கு அனைத்துக்கும் இடம் கொடுப்பது.
10. அநந்தம் (ந-அ) முடிவற்றது.
11. ஸுரவர்த்ம (ந-ந்) ஆகாய வீதி - தேவர்கள் சஞ்சரிக்கும் வழி.
12. கம் (kham) (ந-அ) சூனியம்.

13. வியத் (ந-த்) விரிவடைவது.

14. விஷ்ணுபதம் (ந-அ) விஷ்ணு திரிவிக்ரம அவதாரம் எடுத்தபோது இரண்டாவது அடியாக அளக்கப்பட்டது. (विष्णुपदः--விஷ்ணுபத: (பு-அ) பாற்கடல்; विष्णुपदी-- விஷ்ணுபதீ (பெ-இ) கங்கை).

. . . . वा तु पुंस्याकाश विहायसी । 87

।। इति श्रीमदरसिंह्मकृते नामलिङ्गानुशासने व्योमवर्गः ।।

15. आकाशः (न, पुं/अ), 16. विहायस् (पु/न-अ)

15. ஆகாசம் (ந-அ) ஆகாயம்

ஆகாச: (பு-அ) ஆகாயம்

16. விஹாயஸ் (ந-அ) ஆகாயம்

விஹாயஸ: (பு-அ) ஆகாயம்

வ்யோமவர்கம் முற்றும்.

3. दिग्वर्गः

திசையின் பொதுப்பெயர் :

दिशस्तु ककुभः काष्टा आशाश्च हरितश्च ताः ।

1. दिक् (स्त्री), 2. ककुप् (स्त्री), 3. काष्टा (स्त्री), 4. आशा (स्त्री), 5. हरित् (स्त्री).

1. திக் (பெ-ஷ்) திசை, சுட்டிக்காட்டப்பட்டது.
2. கருப் (பெ-ப்) விரிவடைவது.
3. காஷ்டா (பெ-ஆ) திசையின் எல்லை.
4. ஆசா (பெ-ஆ) நாற்புறமும் விரிவடைகிறது.
5. ஹரித் (பெ-த்) நிறமற்றதாயினும் பசுமைநிறமாகத் தோற்றம் அளிப்பது.

முக்கியமான திசைகள் : 4

प्राच्यवाचीप्रतीच्यस्ताः पूर्वदक्षिणपश्चिमाः ।। 88
उत्तरा दिगुदीची स्याद् दिश्यं तु त्रिषु दिग्भवे ।

1. प्राचि (स्त्री), 2. अवाची (स्त्री), 3. प्रतीची (स्त्री), 4. पूर्वा (स्त्री), 5. दक्षिण (स्त्री), 6. पश्चिमः (स्त्री), 7. उत्तरा (स्त्री), 8. उदीची (स्त्री), 9. दिश्यं (स्त्री).

1. ப்ராசீ (பெ-ஈ) முதலில் சூரியனால் அடையப்படுவது. (கிழக்கு).
2. அவாசீ (பெ-ஈ) கிழக்கு சூரியனை மத்தியில் வெளிப் படுத்துவது. (நண்பகல்).

3. **ப்ரதீசீ** (பெ-ஈ) மேற்கு (கிழக்குக்கு நேர்) எதிரே அணைவது.

4. **பூர்வா** (பெ-ஆ) சூர்ய உதயத்தில் முதலில் தோன்றும் திசை கிழக்கு.

5. **தக்ஷிணா** (பெ-ஆ) (கிழக்கு நோக்கி நின்றால்) வலது புறத்தில் உள்ள திசை தெற்கு.

6. **பச்சிமா** (பெ-ஆ) (கிழக்கு நோக்கி நின்றால்) பின்புறத்தில் உள்ளது. மேற்கு.

7. **உத்தரா** (பெ-ஆ) வலதுபுறத்திலிருந்து நேரே தாண்டினால் வடக்கு.

8. **உதீசீ** (பெ-ஈ) வடக்கு.

9. **திச்யம்** (பு/பெ/ந-அ) திசையில் உள்ளது.

பூர்வ: (பு-அ), தக்ஷிண: (பு-அ), பச்சிம: (பு-அ), உத்தர: (பு-அ), இவை முறையே கீழ்புறம், தென்புறம், மேல்புறம், வடபுறம் என்று ஆண்பாலிலும் வரும்.

திசையின் அதிபர்கள் :

इन्द्रो वह्निः पितृपतिर्नैऋतो वरुणो मरुत् ।। 89
कुबेर ईशः पतयः पूर्वादिनां दिशां क्रमात् ।

1. इन्द्रः (पुं), 2. वह्निः (पुं), 3 पितृपतिः (पुं), 4. नैऋतः (पुं), 5. वरुणः (पुं), 6. मरुत् (पुं), 7. कुबेरः (पुं), 8. ईशः (पुं).

இவர்கள் வரிசையாய் திக்கின் பாலகர்கள்.

1. **இந்த்ர:** (பு-அ) இந்திரன் - கிழக்கின் அதிபதி.

2. **வஹ்நி:** (பு-இ) அக்நி - தென்கிழக்கு மூலையின் அதிபதி.

3. **பித்ருபதி:** (பு-இ) யமன் - தென் திசையின் அதிபதி.

4. **நைர்ருத:** (பு-அ) அரக்கர் தலைவன் நிர்ருதி. தென்மேற்கு திசையின் அதிபதி.

5. வருண: (பு-அ) வருணன் - மேற்கு திசையின் அதிபதி.

6. மருத் (பு-அ) வாயுதேவன் - வடமேற்கு திசையின் அதிபதி.

7. குபேர: (பு-அ) குபேரன் - வடதிசையின் அதிபதி.

8. ஈச: (பு-அ) ஈசாநன் - வடகிழக்கின் அதிபதி.

திசை யானைகள் : 8

எட்டுத் திசையிலும் எட்டு யானைகள் ப்ரம்மாண்டத்தைத் தாங்குகின்றன. அவை:

ऐरावतः पुण्डरीको वामनः कुमुदोऽञ्जनः ।। 90
पुष्पदन्तः सार्वभौमः सुप्रतीकश्च दिग्गजाः ।

1. ऐरावतः (पुं), 2.पुण्डरीकः (पुं), 3. वामनः (पुं), 4. कुमुदः (पुं), 5. अञ्जनः (पुं), 6. पुष्पदन्तः (पुं), 7. सार्वभौमः (पुं), 8. सुप्रतीकः இவை எட்டும் திசை யானைகள்.

1. ஐராவத: (பு-அ) வெள்ளையானை- பாற்கடலில் உதித்தது. கீழ்த்திசையில் தாங்குவது.
2. புண்டரீக: (பு-அ) வெண்தாமரை நிறம் - தென்கீழ்த் திசையில் தாங்குவது.
3. வாமந: (பு-அ) தென்திசையில் தாங்குவது.
4. குமுத: (பு-அ) தென்மேற்குத் திசையில் தாங்குவது.
5. அஞ்ஜந: (பு-அ) மேற்குத் திசையில் தாங்குவது.
6. புஷ்பதந்த: (பு-அ) வடமேற்குத் திசையில் தாங்குவது.
7. ஸார்வபௌம: (பு-அ) வடதிசையில் தாங்குவது.
8. ஸுப்ரதீக: (பு-அ) வடகிழக்குத் திசையில் தாங்குவது.

இச்சொற்களுக்கு விரிவாக்கம் பொருள் பொருந்தாது.

திசையானைகளின் மனைவிகள் :

करिण्योऽभ्रमुकपिलापिङ्गलानुपमाः क्रमात् ।। 91
ताम्रकर्णी शुभ्रदन्ती चाङ्गना चाञ्जनावती ।

1. अभ्रमुः (स्त्री), 2. कपिला (स्त्री), 3. पिङ्गला (स्त्री), 4. अनुपमा (स्त्री), 5. ताम्रकर्णी (स्त्री), 6. शुभ्रदन्ती (स्त्री), 7. अङ्गना (स्त्री), 8. अञ्जनावती (स्त्री).

1. அப்ரமு: (பெ-உ) கீழ்த்திசையில்.

2. கபிலா (பெ-ஆ) தென்கீழ்த் திசையில்.

3. பிங்கலா (பெ-ஆ) தென்திசையில் – பழுப்பு வண்ணம் உடையது.

4. அநுபமா (பெ-ஆ) தென்மேற்குத் திசையில் - உவமை யற்றது.

5. தாம்ரகர்ணீ (பெ-ஈ) மேற்கில்-தாமிர நிறமுடைய காதுகள்.

6. சுப்ரதந்தீ (பெ-ஈ) வடமேற்கு வெள்ளை தந்தமுடையது.

7. அங்கநா (பெ-ஆ) வடக்கில்.

8. அஞ்ஜநாவதீ (பெ-ஈ) வடகிழக்கில் – கருமை வண்ணம்.

திசைமூலைகளின் தனிப்பெயர் :

क्लीबाव्ययं त्वपदिशं दिशोर्मध्ये विदिक् स्त्रियाम् ।। 92

1. अपदिशं (पुं), 2. विदिक् (स्त्री).

1. அபதிசம் (பெ-அ) திசைகளின் நடுவில் (மூலையில்).

2. விதிக் (பெ-ச்) திசைகளின் நடுவில் (மூலையில்).

ப்ரம்மாண்டத்தின் நடுப்பகுதி :

अभ्यन्तरं त्वन्तरालं . . . .

1. अभ्यन्तरं (न), 2. अन्तरालम् (न).

1. அப்யந்தரம் (ந-அ) ப்ரம்மாண்டத்தின் மையப்பகுதி.
2. அந்தராலம் (ந-அ) ப்ரம்மாண்டத்தின் மையப்பகுதி.

ப்ரம்மாண்டத்தைச் சுற்றியுள்ளது :

. . . . चक्रवालं तु मण्डलम् ।

1. चक्रवालं (न), 2. मण्डलं (न).

1. சக்ரவாலம் (ந-அ) வட்டமாகச் சுற்றியுள்ளது.
2. மண்டலம் (ந-அ) வட்டமாகச் சுற்றியுளளது.

மேகத்திற்குரிய சொல் : 15

अभ्रं मेघो वारिवाहः स्तनयित्नुर्बलाहकः ।। 93

धाराधरो जलधरस्तडित्वान् वारिदोऽम्बुभृत् ।

घनजीमूतमुदिरजलमुग्धूमयोनयः ।। 94

1. अभ्रं(न) 2. मेघः (पुं), 3. वारिवाहः (पुं), 4. स्तनयित्नुः (पुं), 5. बलाहकः (पुं), 6. धाराधरः (पुं), 7. जलधरः (पुं), 8. तडित्वान् (पुं), 9. वारिदः (पुं), 10. अम्बुभृत् (पुं), 11. घनः (पुं), 12. जीमूतः (पुं), 13. मुदिरः (पुं), 14. जलमुक् (पुं), 15. धूमयोनिः (पुं).

1. அப்ரம் (ந-அ) சிந்தாத நீர் உடையது.

2. மேக: (பு-அ) ஈரம் உடையது.

3. வாரிவாஹ: (பு-அ) நீரைச் சுமந்திருப்பது.

